புதிய பாடத்திட்டம்

# இலக்கு

## 1000 வினாக்களும் விடைகளும்



தரம் 10 - க.பொ.த. உயர்தர மாணவர்கள்
தமிழ் மொழிப் பரீட்சையில் பகுதி I வினாக்களுக்கு
விடையளிப்பதற்கான ஆற்றுப்படுத்தல்.

தொகுப்பாக்கம்:
திருமதி இந்தி விமலேஸ்வரன் B.A.

# 'இலக்கு'

ஆண்டு 10 முதல் உயர்தர மாணவர்கள் வரை -
முதலாம்பகுதி வினாக்களுக்கு
தயாராவதற்கான ஆற்றுப்படுத்தல்.

(வினாக்களும் விடைகளும்)

ஆக்கம் :

திருமதி. இந்தி விமலேஸ்வரன். B.A

வெளியீடு :

*லங்கா புத்தகசாலை*

*F.L.1-14, டயஸ் பிளேஸ்,*

*குணசிங்கபுர,*

*கொழும்பு - 12*

*தொ.பே: 011-2341942*

| | | |
|---|---|---|
| நூல் தலைப்பு | : | ' இலக்கு' |
| நூல் தொகுப்பாசிரியர் | : | திருமதி. இந்தி விமலேஸ்வரன் B.A |
| முதற் பதிப்பு | : | 2011 |
| கணனிப் பதிவு | : | குளோபல் கிராபிக்ஸ்,<br>இல.14, 57ஒழுங்கை,<br>கொழும்பு - 06.<br>தொ.பே. 011-2360678. |
| வெளியிடுபவர்கள் | : | லங்கா புத்தகசாலை<br>F.L. 1-14, டயஸ் பிளேஸ்,<br>குணசிங்கபுர<br>கொழும்பு - 12.<br>தொ.பே. 011-2341942. |

| | | |
|---|---|---|
| Book | : | ' Ilakku' |
| Author | : | Mrs. Inthi Vimaleswaran |
| First Edition | : | 2011. |
| TypeSetting & Printing | : | Global Graphics,<br>#14, 57th Lane,<br>Wellawatte,<br>Colombo - 06.<br>Tel. No. 011-2360678 |
| Published by | : | Lanka Book Depot (Pvt) Ltd<br>F.L.I. 14, Dias Place,<br>Gunasingapura,<br>Colombo 12.<br>Tel. No. 011-2341942 |

# என்னுரை

'இலக்கு' என்னும் பெயரைத் தாங்கி வரும் இந்நூல் ஆண்டு 10 முதல் உயர்தர வகுப்பு மாணவர்கள் வரை தமது 'பகுதி I' ற்கான வினாப்பத்திரத்திற்கு தம்மைத் தயார்படுத்த சிறந்த ஆற்றுப்படுத்துகையாக அமையும்.

இலக்கணப்பகுதிகள் அனைத்தும் உள்ளடக்கப்பட்ட இந்நூல் புதிய பாடத்திட்டத்திற்கமைவாக தயாரிக்கப்பட்டது. மாணவர்கள் இலக்கண அறிவில் சிறந்த தேர்ச்சி பெறுவதற்கு இவ் 'இலக்கு' அரிய பயிற்சித் களமாகவே காணப்படும் என்பது என் எண்ணம்.

இந்நூல் ஆயிரம் வினாக்கங்களையும் அதற்கான விடைகளையும் உள்ளடக்கியது. இதனுள் சகல இலக்கணப் பகுதிகளுடன் மரபுத்தொடர்கள், உவமைத் தொடர்கள், பழமொழிகள், பிறமொழிச் சொற்கள், வடமொழிச் சொற்கள், கலைச் சொற்கள் என்பன உள்ளடக்கப்பட்டுள்ளமையால் எக்காலத்திற்கும் பயனுடையது. காலத்தால் எதிர் கொள்ளத்தக்கது.

மேலும் விடைகள் இணைக்கப்பட்டுள்ளதால் மாணவர்கள் தம்மைத் தாமே மதிப்பீட்டுக் கொள்வது இலகுவானது.

மாணவர்கள் தமது 'இலக்கை' அடைவதற்கு 'இலக்கு' துணை நிற்கும் என்பதில் தளராத நம்பிக்கையுடையேன்.

நன்றி

**திருமதி. இந்தி விமலேஸ்வரன். B.A.**

# ஆண்டு 10 முதல் உயர்தரம் வரையிலான மாணவர்களுக்கான "பகுதி I"க்குரிய வினாக்கள்

## சரியான விடையை தெரிவு செய்க:

1. வினைச் சொல்லின் காலங்காட்டும் ஓர் உறுப்பு?
   1. பகுதி 2. விகுதி 3. சாரியை 4. இடைநிலை

2. வினைச்சொல்லோடு பெயர்ச்சொல் காணப்பட்டு நிற்கும் தொடர் மொழி?
   1. கார் கூந்தல் 2. மற்றொன்று 3. பாற்சோறு 4. நிலம் பிளந்தது

3. பசுவின் வால் என்ற தொடரில் "பசுவின்" என்பதில் வந்த "இன்"?
   1. இடைநிலை 2. சாரியை
   3. வேற்றுமை உருபு 4. விகுதி

4. பின்வரும் சொற்களில் பெயராகவும் வினையாகவும் அமையக்கூடியது?
   1. அழகு 2. அறிவு 3. உணர் 4. கல்

5. "நீ இதைச் செய்க" இவ்வாக்கியத்தில் உள்ள "செய்க" என்பது?
   1. வினையெச்சம் 2. பெயரெச்சம்
   3. வினையாலணையும் பெயர் 4. வியங்கோள் வினைமுற்று

6. எழுவாயும் செயற்படுபொருளும் மறைந்து நிற்கும் வாக்கியம்?
   1. உயர்ந்து நில் 2. கடைக்குப் போ
   3. உண்மை பேசு 4. நன்றாய் படி

7. வாக்கியத்தினை காட்டுவது பின்வருவனவற்றுள் எது?
   1. போ 2. பறவை 3. நனி 4. சும்மா

8. "வானக்கடலில் வெள்ளியோடம் ஒன்று கண்டேன்" இங்கு வானக்கடல் என்பதில் உள்ள அணி?
   1. உயர்வு நவிற்சி 2. தன்மை நவிற்சி
   3. உருவகம் 4. உவமை

9. பின்வருவனவற்றுள் வட எழுத்துக் கலந்த கூட்டமெது?
   1. ச, க, ட, ர  2. ப,ஞ,ங,ண  3. ய,ச,ங,வ  4. ம,ப,ஷ,ஸ

10. "கரிய மனிதன்" எனபதில் "கரிய" என்பது?
   1. குறிப்பு வினைமுற்று
   2. குறிப்பு வினையாலணையும் பெயர்
   3. குறிப்பு வினையெச்சம்
   4. குறிப்பு வினைப் பெயரெச்சம்

11. பின்வருவனவற்றுள் 'உம்மைத் தொகை' எது?
   1. பவளவாய்  2. முத்துப்பல்
   3. இலைமறைகாய்  4. சேர, சோழ, பாண்டியர்

12. புளியம்பழம் என்பதில் இடம்பெற்றுள்ள "அம்" என்பது?
   1. விகுதி  2. சந்தி  3. சாரியை  4. விகாரம்

13. தரப்பட்ட சொல்வகைக்குப் **பொருந்தாத** சொல் இடம்பெறும் வரிசை?
   1. ஆண்பால்- மனிதன், அரசன், ஆசிரியன்
   2. பெண்பால்- அன்னை, அரசி, தங்கை
   3. ஒன்றன்பால்- யானை, வேங்கை, மான்
   4. பலர்பால்- சிறுவர்கள், மாணவர்கள், குழந்தை

14. பின்வரும் வாக்கியங்களுள் 'செயற்படுபொருள் **அற்ற** வாக்கியம்' எது?
   1. பரதன் பரத்துவாசனை வீழ்ந்து வணங்கினான்
   2. விபீடணன் கும்பகர்ணனை இராமனிடம் அழைத்தான்
   3. குந்திதேவி கர்ணனைக் கட்டித்தழுவினாள்
   4. அனுமன் அசோகவனஞ் சென்றான்

15. "குளநெல்" என்பதில் இடம்பெற்றுள்ளது எவ்வகைப் புணர்ச்சி?
   1. இயல்பு  2. தோன்றல்  3. கெடுதல்  4. திரிதல்

16. 'ஏழை எளியவர்' என்பது என்ன தொடர்?
   1. அடுக்குத் தொடர்  2. அடுக்கிடுக்குத்தொடர்
   3. இணைமொழித்தொடர்  4. உவமைத்தொடர்

17. 'இயம்பு' என்னும் சொல்லின் நுட்பப் பொருள்?
   1. ஒன்றை இன்னிசையுடன் சொல்லுதல்
   2. முக்கிய செய்தியைப் பொதுமக்களுக்கு அறிவித்தல்
   3. ஒன்றைக் கோவைபட அல்லது ஒழுங்குபடச் சொல்லுதல்
   4. ஒன்றை விளக்கிச் சொல்லுதல்

18. "அன்னோ, கடற்பேரலையால் உண்டான அழிவுகளை என்னென்று சொல்வேன்"! இங்கு "அன்னோ" என்ற இடைச்சொல் உணர்த்தும் பொருள்?
   1. கழிவுப்பொருள்
   2. காலப்பொருள்
   3. ஐயப்பொருள்
   4. இரக்கப்பொருள்

19. "ஒவ்வொரு சொல்லையுந் தெளிவாகச் சொல்லுதல்" என்ற நுட்பமான பொருள் தரும் சொல்?
   1. மொழிதல்   2. பகர்தல்   3. செப்புதல்   4. கூறுதல்

20. "கடி மிளகு தின்ற கல்லா மந்தி" என்பதில் "கடி" என்ற உரிச்சொல் உணர்த்தும் குணம்?
   1. கரிப்பு   2. புதுமை   3. விரைவு   4. ஆர்த்தல்

21. பின்வருவனவற்றுள் "வா" என்னும் அடியாகப் பிறந்த பெயர்?
   1. வாவல்   2. வாயில்   3. வாரானை   4. வாடை

22. பின்வருவனவற்றுள் எழுவாய் தொக்கு நிற்கும் வாக்கியம்?
   1. சகுனி சூதாட்டத்தில் வீரன்
   2. சோமசுந்தரப்புலவரின் பாடல்கள் சுவையானவை
   3. மூக்கு அறுபட்ட சூர்ப்பனகையின் கதையை அறிவாயா?
   4. அழுத பிள்ளை பால் குடிக்கும்

23. பின்வருவனவற்றுள் இடைப்போலி?
   1. அவ்வை   2. அறன்   3. ஐயர்   4. பழமை

24. பின்வருவனவற்றுள் பொதுமொழி?
   1. காசா லேசா   2. ஊதாரி
   3. உலோபி   4. உவ்வீடு

25. கடல் + நீர் என்பதைப் புணர்த்தி எழுதும் சரியான முறை?
   1. கடல்நீர்   2. கடனீர்   3. கடற்நீர்   4. கடநீர்

26. "நம்புதல்" என்னும் சொல்லின் அடி?
   1. நகை   2. நம்பு   3. நடை   4. நா

27. "ஆசிரியரைக் கண்டதும் சண்டியன் சால்வையை எடுத்து அரையிற் கட்டினான்." இதில் வந்துள்ள ஆகுபெயர்?
   1. ஆசிரியர்   2. சண்டியன்   3. சால்வை   4. அரை

28. தமிழ் நெடுங்கணக்கு ஒழுங்கில் அமையாத எழுத்துக் கூட்டம்?
   1. ஞ, ந, ல, ர   2. த, ய, வ, ள
   3. க, ட, வ, ர   4. ச, ம, ப, ற

29. பின்வருவனவற்றுள் "ஆக்கப்பெயராக" வருவது?
   1. கொடை   2. மரம்   3. வானொலி   4. போதல்

30. "கூலி வேலை செய்தான்" இவ்வாக்கியத்தில் 'கூலி' வேலை என்பது?
   1. இரண்டாம் வேற்றுமைத் தொகை
   2. மூன்றாம் வேற்றுமைத் தொகை
   3. நான்காம் வேற்றுமைத் தொகை
   4. ஏழாம் வேற்றுமைத் தொகை

31. சந்தி பிரிக்கும் வகையால் இரு வேறு பொருள் கொள்ளத்தக்க ஒரு புணர்மொழி?
   1. பொருணயம்   2. வெண்டாமரை
   3. பொன்னன்று   4. மன்றாடி

32. "தாயோடறு சுவை போம்" இவ்வாக்கியத்தில் அறு சுவை என்பது?
   1. வினைத்தொகை   2. பண்புத்தொகை
   3. உவமைத்தைாகை   4. உம்மைத்தொகை

33. "இன்று பரீட்சை என்று மாணவர் நினைத்தனர்" இவ்வாக்கியத்தில் உள்ள இடைச்சொல்?
   1. இன்று   2. என்று   3. மாணவர்   4. நினைத்தனர்

34. "நல்லன்" என்பது?
   1. தெரிநிலைவினை   2. வினையாலணையும் பெயர்
   3. குறிப்பு வினைமுற்று   4. தொழிற்பெயர்

35. பெயராகவும் வினையாகவும் வழங்கும் ஒரு சொல்?
   1. பாய்   2. உண்   3. தாய்   4. சித்திரி

36. பின்வருவனவற்றுள் பயனிலை மறைந்து நிற்கும் வாக்கியம் எது?
   1. தருமம் தலை காக்கும்
   2. ஒருவரையும் பொல்லாங்கு சொல்ல வேண்டாம்
   3. சிறு துரும்பும் பல் குத்த உதவும்
   4. துறவிக்கு வேந்தன் துரும்பு

37. "எண் அடையை" ஏற்று வந்த பெயர்ச் சொல்?
   1. சிறிய கண்கள்   2. எந்தப் பத்தகம்
   3. மூன்று முகம்   4. சதுரப் பெட்டி

38. பின்வருவனவற்றுள் "பெயராக மட்டும்" வழங்கும் ஒரு சொல்?
   1. அரி   2. திரி   3. கிரி   4. வரி

39. பின்வருவனவற்றுள் இருபாற்கும் பொதுவாக வழங்காத சொல் எது?
   1. பாங்கி   2. வியாபாரி   3. அறிவாளி   4. நீதிபதி

40. கண்ணன் பாட ராதை ஆடினாள். இங்குவந்த "பாட" என்பது?
   1. குறிப்பு வினையெச்சம்
   2. தெரிநிலை வினைமுற்று
   3. குறிப்பு வினைமுற்று
   4. தெரிநிலை வினையெச்சம்

41. பின்வருவனவற்றுள் "எச்சமாகவும் முற்றாகவும்" வழங்கும் ஒரு சொல்?
   1. விழுந்தான்   2. விழுந்த   3. விழுந்து   4. விழும்

42. "வேற்கண்ணாள் வந்தாள்" இங்கு வந்த "வேற்கண்" என்பது?
   1. வினைத்தொகை   2. வேற்றுமைத்தொகை
   2. உவமைத்தொகை   4. அன்மொழித்தொகை

43. “அருமந்த பழத்தை அணில் கொறித்து விட்டது” இங்கு வந்த “அருமந்த” என்பது?
   1. மரூஉ  2. மங்கலம்
   3. குழூஉக்குறி  4. இடக்கரடக்கல்

44. “முப்பகல்” என்பதைப் பிரித்தெழுதினால்?
   1. முன் + பகல்  2. மூன்று + பகல்
   3. முன்பு + பகல்  4. முன்னைய + பகல்

45. “அகத்திருள் போக்கும் அறிவெனும் சூரியனாம் அறிஞர் அண்ணா தோன்றினார்” இங்கு வந்த “அறிவெனும் சூரியன்” என்பது?
   1. உவமை  2. உருவகம்
   3. உயர்வு நவிற்சி  4. தற்குறிப்பேற்றம்

46. “கருணை காட்டுக” இது எவ்வகை வாக்கியம்?
   1. கூற்று வாக்கியம்  2. வினா வாக்கியம்
   3. ஏவல் வாக்கியம்  4. வியங்கோள் வாக்கியம்

47. “மலையில் கோவில்” இங்கு இடம்பெற்றுள்ள வேற்றுமை?
   1. 4ம் வேற்றுமை  2. 5ம் வேற்றுமை
   3. 6ம் வேற்றுமை  4. 7ம் வேற்றுமை

48. “ஓடுமீன் ஓட உறுமீன் வருமளவும் வாடியிருக்குமாம் கொக்கு” இதன் எழுவாய்?
   1. ஓடுமீன்  2. உறுமீன்  3. வருமளவு  4. கொக்கு

49. திரிதல் விகாரப் புணர்ச்சிக்கு ஓர் உதாரணம்?
   1. பாற்குடம்  2. நிலப்பரப்பு  3. மண்மேடு  4. கன்னுக்குட்டி

50. “மலரில் தேனை முகரலாம்” “மலரில் தேனை” என்பது
   1. 5ம் வேற்றுமை  2. 6ம் வேற்றுமை
   3. 7ம் வேற்றுமை  4. 8ம் வேற்றுமை

51. “சுடுசரம் வீழ்வதன் முன்னமே போமின்” - “சுடுசரம்” என்பது
   1. பண்புத்தொகை  2. அன்மொழித்தொகை
   3. வேற்றுமைத்தொகை  4. வினைத்தொகை

52. "ஆடை களைந்து தலை மீதினில் அணிந்தோம்" இங்கு களைந்து என்பது?
1. பெயரெச்சம் 2. வினையெச்சம்
3. குறிப்பு வினை 4. தொழிற்பெயர்

53. பகுபத உறுப்புகள் ஆறும் பெற்று வந்த சொல்
1. தேடினான் 2. படித்தான் 3. நடந்தனன் 4. படிக்கின்றான்

54. "வருகின்றான்" என்ற சொல்லின் நிகழ்கால இடைநிலை எது?
1. வா 2. கின்று 3. இன் 4. ஆன்

55. பின்வருவனவற்றுள் எச்சமாயும் முற்றாகவும் வழங்கும் ஒரு வினைச்சொல்?
1. வாழ்க 2. சென்றது 3. உண்ணும் 4. கற்றார்

56. "போலிகளைக் கண்டு ஏமாற வேண்டாம்" இங்கு போலி என்பதன் எதிர்க்கருத்துச் சொல்?
1. நகல் 2. பிரதி 3. உண்மை 4. அசல்

57. பாணன் சபையோரால் நன்கு வரவேற்கப்பட்டான். இங்கு "பாணன்" என்பதன் எதிர்ப்பாற் சொல்
1. பாணி 2. விறலி 3. பாடினி 4. பாடினேன்

58. நீயோ? அவனோ? யார் இதைக்..................................
1. கொடுத்தாய் 2. கொடுத்தான்
3. கொடுத்தார் 4. கொடுத்தீர்கள்

59. அவன் என்னிடம் வந்தாலன்றி நான் பணம் ............................
1. கொடுத்தேன் 2. கொடுக்கவில்லை
3. கொடேன் 4. கொடுப்பதின்று

60. ஆண்மகனோ? பெண்மகளோ? அங்கே ..................................
1. தோன்றுகின்றவன் 2. தோன்றுகின்றவள்
3. தோன்றுகின்றவர் 4. தோன்றுகின்றது

61. தேர் செலுத்துபவன் "பாகன்" என்பது போல "கப்பல் செலுத்துபவன்"
1. மீகாமன் 2. வலவன் 3. சாரதி 4. பாகன்

62. கலை என்பதற்குப் "பிணை" போல "போத்து" என்பதற்கு
   1. போத்தி   2. பிணை   3. பிணா   4. மறி

63. யானை "பிளிறும்" என்பது போல "ஆந்தை"
   1. அகவும்   2. கத்தும்   3. உறுமும்   4. அலறும்

64. சிங்கத்தின் இளையது "குருளை" என்பது போல யானையின் இளையது
   1. போத்து   2. பறள்   3. பிள்ளை   4. போதகம்

65. ஊர் சிரித்தது. இங்கு "ஊர்" என்பது
   1. சினையாகுபெயர்   2. இடவாகுபெயர்
   3. காலவாகுபெயர்   4. தொழிலாகுபெயர்

66. "சகாப்தம்" என்பது
   1. நூறு ஆண்டுகள் கொண்ட காலப்பகுதி
   2. பத்து ஆண்டுகள் கொண்ட காலப்பகுதி
   3. ஆயிரம் ஆண்டுகள் கொண்ட காலப்பகுதி
   4. அறுபது ஆண்டுகள் கொண்ட காலப்பகுதி

67. "கடவுள் இல்லை" என்ற கொள்கையுடையவன்
   1. ஆத்திகன்   2. பக்தன்   3. பொய்யன்   4. நாத்திகன்

68. கடலும் கடல் சார்ந்த இடமும்
   1. மருதம்   2. குறிஞ்சி   3. நெய்தல்   4. முல்லை

69. மாலையில் அல்லது இரவில் கூடும் சந்தை
   1. அங்காடி   2. அல்லங்காடி
   3. நாளங்காடி   4. அரங்கம்

70. "தேன்மொழி பாடினாள்" என்பது
   1. உவமைத்தொகை   2. உம்மைத்தொகை
   3. அன்மொழித்தொகை   4. பண்புத்தொகை

71. "படையது தொகுதி" என்பதில் வந்துள்ள வேற்றுமை
   1. ஆறாம் வேற்றுமை   2. மூன்றாம் வேற்றுமை
   3. நான்காம் வேற்றுமை   4. இரண்டாம் வேற்றுமை

72. பின்வருவனவற்றுள் சிலேடையல்லாதது
1. பலகை 2. வேங்கை 3. கதிரை 4. திருக்கை

73. சந்திரன் + உதயம் என்பதைச் சேர்த்து எழுதினால்
1. சந்திரனுதயம் 2. சந்திரோதயம்
3. சந்திரஉதயம் 4. சந்திரவுதயம்

74. பின்வருவனவற்றுள் சுட்டெழுத்து அல்லாதது
1. அ 2. இ 3. உ 4. ஒ

75. மா, பலா, வாழை என்பனவற்றின் தொகைப்பெயர்ச் சொற்றொடர்
1. முக்குணம் 2. முக்கொடி 3. முப்பழம் 4. மும்மரம்

76. "தங்கப்பந்து போன்ற காலைச் சூரியன் 'தகதக'வெனப் பிரகாசித்தான்" என்பதில் தகதக என்பது
1. அடுக்குமொழி 2. இரட்டைமொழி
3. இணைமொழி 4. மரபுத்தொடர்

77. ஒரு நூலின் பிற்சேர்க்கையாக அமையும் பகுதி
1. அனுபந்தம் 2. சரவை 3. அகவை 4. நன்றியுரை

78. அதிகாரிகளின் அட்டூழியங்களைப் பொறுக்க முடியாத ஊழியர்கள் கிளர்ச்சி செய்தனர். இங்கு **"அட்டூழியம்"** என்பதன் பொருள்
1. நற்செயல் 2. அமைதி 3. தீச்செயல் 4. கொடுமை

79. உள்ளத்தில் நிகழ்ந்து பிறருக்கு இத்தகையதானதென்று கூறமுடியாத **"இன்ப ஒழுக்கம்"**
1. மனநெகிழ்ச்சி 2. உளப்பாங்கு
3. மெய்ப்பாடு 4. அகத்திணை

80. ஒரு நாடு தன் நாட்டுச் செல்வத்தின் மதிப்பிற்கு அதிகமாகப் பணத்தை புழக்கத்திற் கொண்டு வரும் முறை?
1. பணவாட்டம் 2. உபரித்தொகை
3. பணவீக்கம் 4. மாற்றுவீதம்

81. "பொருள்நயமோ, சொல் நயமோ இல்லாத" கவிதை
1. பஞ்சக்கவி 2. வித்தாரக்கவி
3. புதுக்கவி 4. வெள்ளைக்கவி

82. **அன்னம், கவரிமா, மலை, புளியமரம்** என்பவற்றைக் குறிக்கும் ஒரு சொல்

1. ஓதனம் 2. ஓதிமம் 3. கா 4. பர்வதம்

83. **பணக்காரனுக்கு பணக்காரி** என்பது போல, **புருடனுக்கு**

1. பட்டி 2. மனைவி 3. புருடி 4. புனிதை

84. **கோழிக்கு குஞ்சு** என்பது போல, **குரங்குக்கு**

1. பறள் 2. வடலி 3. பிள்ளை 4. குருளை

85. **ஆடு கத்தும்** என்பது போல, **எருது**

1. முணங்கும் 2. முக்காரமிடும்
3. சீறும் 4. உறுமும்

86. மனைவியை இழந்தவன்

1. தபுதாரன் 2. கணவன்
3. அதிஷ்டசாலி 4. நைட்டிகன்

87. "உப்பில்லாப் பேச்சு" என்பதன் பொருள்

1. சுவையற்ற பேச்சு 2. நீதி நியாயமற்ற பேச்சு
3. பயனற்ற பேச்சு 4. முடிவில்லாப் பேச்சு

88. அந்தோ, ஆழிப்பேரலையால் ஆயிரக்கணக்கானோர் அகதிகளாகி விட்டார்களே! இங்கு **அந்தோ** எனற இடைச்சொல் குறித்து நிற்கும் பொருள்

1. இரக்கப்பொருள் 2. எல்லைப்பொருள்
3. அச்சப்பொருள் 4. இசைப்பொருள்

89. "என்னை" என்ற சொல்லைப் பிரித்து எழுதினால் சரியானது

1. என் + ஐ 2. எ + ஐ 3. எள் + ஐ 4. நான் + ஐ

90. "விஞ்ஞானம்" என்னும் சொல்லிலுள்ள "வி" என்னும் முன்னொட்டு உணர்த்தும் பொருள்

1. இழிவு 2. உயர்வு 3. இன்மை 4. விசேடம்

91. "நாற்குணமும் நாற்படையா........." எனவரும் பாடலில் நாற்குணம் என்பது
1. அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு
2. அறம், பொருள், ஊறு, ஓசை
3. சுவை, ஒளி, ஊறு, ஓசை
4. மெய், வாய், கண், மூக்கு

92. **மானின் ஆண் கலை** எனப்படுவது போல **நண்டின் ஆண**
1. போத்து 2. அலவன் 3. குண்டு 4. கடுவன்

93. பின்வருவனவற்றுள் **வியங்கோள் வாக்கியம்** யாது?
1. மணமக்கள் நீடூழி வாழ்க 2. பெற்றோர் சொற்படி நட
2. கவனமாகப் படி 4. அதிகாலையில் நித்திரை விட்டெழு

94. புகையிலை அடுக்கப்பட்டிருப்பதைக் கூறுவது
1. கற்றை 2. போர் 3. பாடம் 4. கூட்டம்

95. ஒரே சமயத்தில் **நூறு விடயங்களை அவதானிக்கும் ஆற்றல** படைத்தவன்
1. வானசாஸ்த்திரி 2. தசாவதானி
3. சதாவதானி 4. ஏகாவதானி

96. அவரை, உழுந்து என்பவற்றின் உள்ளீடு
1. சுளை 2. சோறு 3. பருப்பு 4. அரிசி

97. வாழையின் பிஞ்சு
1. வடு 2. மூசு 3. குரும்பை 4. கச்சல்

98. தமிழில் உள்ள முதல் எழுத்துக்களின் எண்ணிக்கை
1. 30 2. 18 3. 126 4. 247

99. "நண்ப, பிறர்மனம் துன்புறும்படி பேசாதே". இவ்வாக்கியம்
1. கூற்று வாக்கியம் 2. ஏவல் வாக்கியம்
3. வியங்கோள் வாக்கியம் 4. உணர்ச்சி வாக்கியம்

100. "மணிமகுடம் சூடிய மாவேந்தன் அரசவையில் கொலு வீற்றிருந்தான்" இதில் உள்ள எழுவாய்
1. அரசவை 2. மணிமகுடம்
3. மாவேந்தன் 4. கொலு

101. 'நாடுநகர்' என்பது
1. இரட்டைமொழி
2. அடுக்குமொழி
3. அடுக்கிடுக்கு மொழி
4. இணைமொழி

102. மாலா மணம் மிகுந்த மலர்களைப் பறித்தாள். இதில் வந்துள்ள "மலர்கள்" என்பது
1. எழுவாய்
2. பயனிலை
3. செயற்படுபொருள்
4. இல்லை

103. பெயராகவும் வினையாகவும் வரத்தக்க ஒரு சொல்
1. இரு 2. போ 3. ஓடு 4. நில்

104. உயர்திணை இருபாற் பொதுப்பெயர் அல்லாதது
1. அமைச்சன் 2. அறிவாளி 3. குரிசில் 4. காரியதரிசி

105. சேலைக்கு நூல் வாங்கினான். இதில் வந்துள்ள நாலாம் வேற்றுமைப் பொருள்
1. முதற்காரணம்
2. நிமித்த காரணம்
3. கொடை
4. தகுதி

106. காரணப் பெயர்களில் ஒன்று
1. மரம் 2. பறவை 3. கடல் 4. யானை

107. பகுபத உறுப்புகள் ஆறும் உள்ள சொல்
1. உண்டனன் 2. அன்பன் 3. படித்தனன் 4. வளர்ந்தனன்

108. அறிவுத்துறைகள் அனைத்தையும் பற்றிய விடயங்களைத் திரட்டித் தரும் நூல் என்பது
1. களஞ்சியம்
2. கலைக்களஞ்சியம்
3. நிகண்டு
4. நூதனசாலை

109. "நெடுங்காலம் வாழ்பவன்" என்ற பொருளை உணர்த்தும் சொல்
1. சிரஞ்சீவி 2. சஞ்சீவி 3. தீர்க்கதரிசி 4. சதாவதானி

110. பலாவின் இளங்காய்
1. கச்சல் 2. மூசு 3. வடு 4. பிஞ்சு

111. முரசறைந்து மன்னனது ஆணையை மக்களுக்கு அறிவிப்பவன்
1. சேவகன் 2. கலைஞன் 3. வள்ளுவன் 4. ஒற்றன்

112. இயல், இசை, நாடகம் என்பது
1. முப்பொருள் 2. முத்தமிழ் 3. முக்கலை 4. முச்சுடர்

113. வி.சி.டி (V.C.D) என்பதற்குப் பொருத்தமான கலைச்சொல்
1. சுவடிகள் கூடம்
2. இறுவட்டு
3. அருங்காட்சியகம்
4. அடர்த்தகடு

114. "பசி வந்தால் பத்தும் பறந்து போம்" - இங்கு பத்து என்பது
1. முதலாகு பெயர்
2. அளவையாகு பெயர்
3. உவமையாகு பெயர்
4. பண்பாகு பெயர்

115. "வன்சொல் துன்பம் தரும்" இங்கு வன்சொல் என்பது
1. பண்புத்தொகை
2. உவமைத்தொகை
3. வேற்றுமைத்தொகை
4. அன்மொழித் தொகை

116. பின்வருவனவற்றுள் பயனிலையும் செயப்படுபொருளும் சேர்ந்து நிற்கும் வாக்கியம் என்பது எது?
1. கவனமாகப் படி
2. எழுந்து நில்
3. கலைந்து செல்
4. கையை உயர்த்து

117. அன்னாசிப்பழம் ஒன்றை வாங்கி உண்டான் - இங்கு "அன்னாசி" என்பது
1. வடசொல்
2. திசைச் சொல்
3. இயற்சொல்
4. திரி சொல்

118. அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய நான்கும் புருடார்த்தங்கள் எனப்படும். இவ்வாக்கியத்தில் பயன்படுத்தப்பட்டுள்ள , என்ற குறியீடு
1. அரைப்புள்ளி
2. காற்புள்ளி
3. முக்காற்புள்ளி
4. முற்றுப்புள்ளி

119. பணம் சம்பந்தமான கொடுக்கல் வாங்கல்களை பதிவதற்குரிய குறிப்புப் புத்தகம்............................ எனப்படும்
1. பதிவேடு
2. காசேடு
3. நாட்பதிவேடு
4. கணக்குப் பதிவேடு

120. ஒரு கருமத்ததை முடிப்பதற்காகக் கொடுக்கப்படும் "இலஞ்சம்"
1. கையூட்டு 2. கைலஞ்சம் 3. கையுறை 4. கைம்மாறு

121. அன்பு, நாண், ஒப்புரவு, கண்ணோட்டம என்னும் நல்ல நற்குணங்கள் எனப்படும்.
1. நாற்குணம் 2. சால்பு
3. நாற்பொருள் 4. சுயம்பு

122. யானை, சிங்கம் என்பனவற்றைக் குறிக்கும் ஒரு சொல்
1. ஆளி 2. அரி 3. ஆழி 4. கரி

123. கச்சேரி, போட்டி, அமுல் என்பன எம்மொழியைச் சேர்ந்தவை
1. அரபு மொழி 2. உருது மொழி
3. பாரசீக மொழி 4. கிரேக்க மொழி

124. நெற்கதிர், பெருச்சாளி என்பனவற்றைக் குறிக்கும் ஒரு சொல்
1. கலகம் 2. அளக்கர் 3. அரிசி 4. களகம்

125. உயர்திணை இருபாற்பொதுப் பெயர்களில் ஒன்று
1. அகதி 2. அரசன் 3. சூரியன் 4. வீராங்கனை

126. "நீ வராதே" என்பதில் வினை
1. படர்க்கை வினை 2. முன்னிலை ஒருமை வினை
3. தன்மை ஒருமை வினை 4. தன்மைப் பன்மை வினை

127. நீர் பாய்ச்சுவதன் மூலம் பூரணமான விளைச்சலைப் பெறமுடியும் என்பதில் "பாய்ச்சு" என்ற வினை
1. பிறவினை 2. தன்வினை
3. குறிப்பு வினை 4. ஏவல் வினை

128. "களவெடுத்தாலும் பொய் சொல்லாதே" என்பதில் எழுவாய்
1. களவு 2. பொய் 3. சொல் 4. நீ

129. "வாள் கொண்டு வெட்டினான்" என்பதில் உள்ள சொல்லுருபு
1. வாள் 2. கொண்டு 3. வெட்டு 4. அவன்

130.“கிரிக்கட் போட்டித் தொடரில் உலகக் கிண்ணத்தை இலங்கை வென்றது” என்பதில் “இலங்கை” என்பது?

1. பொருளாகுபெயர் 2. இடவாகுபெயர்
3. காலவாகுபெயர் 4. தொழிலாகுபெயர்

131.“மயில் தோகை விரித்தாடியது” என்பதிலுள்ள தொகைமொழி

1. வேற்றுமைத்தொகை 2. உம்மைத் தொகை
3. உவமைத் தொகை 4. வினைத் தொகை

132.“காலைக் கதிரவன் தன் பொற்கதிர்களைப் பரப்பினான்” என்பதில் வந்துள்ள அணி

1. உருவகம் 2. உயர்வு நவிற்சி
3. உவமை 4. தற்குறிப்பேற்றம்

133.“தேங்காய்” என்பதைப் பிரித்து எழுதினால்

1. தென்னை + காய் 2. தேங்கு + காய்
3. தெங்கு + காய் 4. தென்னம் + காய்

134.பின்வருவனவற்றுள் இனவெழுத்து இல்லாத தொகுதி

1. இடையினம் 2. வல்லினம் 3. மெல்லினம் 4. உயிரினம்

135. “ நடப்பது நடக்கட்டும்” என்பது

1. செப்பு வாக்கியம் 2. ஏவல் வாக்கியம்
3. வினா வாக்கியம் 4. வியங்கோள் வாக்கியம்

136.“செய்ந்நன்றி மறந்தோர் நரகத்தினை அடைவர்” இதில் வந்துள்ள எழுவாய்

1. செய்ந்நன்றி 2. மறந்தோர்
3. செய்ந்நன்றி மறந்தோர் 4. நன்றி மறந்தோர்

137.நிகழ்கால இடைநிலைகளாக வருவன

1. கின்று, கிறு 2. து,டு,று 3. ப், வ் 4. த், ட், ற்

138.பின்வருவனவற்றுள் வாக்கியமாக அமைந்துள்ளது எது?

1. பொய் 2. மிருகம் 3. உறு 4. இரு

139.பின்வருவனவற்றுள் பெயராயும் வினையாயும் வரும் சொல்

1. தடி 2. சோதி 3. இடு 4. கார்

140. "சந்திர ஓடம் வானக் கடலில் நீந்தியது" - இதில் வந்த அணி
1. உவமை
2. வேற்றுமை
3. தற்குறிப்பேற்றம்
4. உருவகம்

141. பின்வருவனவற்றுள் வந்த வேற்றுமொழிச்சொல்
1. சோறு 2. குழம்பு 3. சாம்பார் 4. பொரியல்

142. ப∴றலை என்பதை பிரித்தெழுதினால் வருவது
1. ப + றலை 2. பல + தலை 3. ப + தலை 4. பற + தலை

143. "மாணவர்களுக்கு ஒழுக்கமே உயிரெனப்படும்" இதில் வந்த நான்காம் வேற்றுமைப் பொருள்
1. கோடல் 2. நட்பு 3. தகுதி 4. காரணகாரியம்

144. பின்வருவனவற்றுள் எழுவாய் தொக்கு நிற்கும் வாக்கியம் எது?
1. காற்று வீசுகிறது
2. அறம்செய விரும்பு
3. கமக்காரன் வயல் உழுதான்
4. ஆசிரியர் - வகுப்பறையில் இருக்கின்றார்

145. பன்மை விகுதி பெற்று வராத சொல் எது?
1. மணல் 2. யானை 3. புத்தகம் 4. கப்பல்

146. தோன்றல் விகாரப் புணர்ச்சிக்கு உதாரணம் யாது?
1. மரவேர் 2. நெற்பயிர் 3. செய்ந்நன்றி 4. குழலோசை

147. **சேர, சோழ, பாண்டியர்** தமிழ்நாட்டை சிறப்பாக ஆண்டனர். இதில் **சேர, சோழ, பாண்டியர்** என்பது
1. வேற்றுமைத் தொகை
2. வினைத்தொகை
3. உம்மைத்தொகை
4. உவமைத்தொகை

148. தவமிருந்து பெற்ற சின்னஞ்சிறிய மழலையை தாய் **கண்ணுங் கருத்துமாகப்** பாதுகாத்தாள். இதில் வந்துள்ள இணைமொழி
1. சின்னஞ் சிறிய
2. கண்ணுங்கருத்தும்
3. மழலை
4. தவமிருந்து

149. "தந்தையுடன் மைந்தன் வந்தான்" என்பதில் உள்ள உடன்
1. 2ம் வேற்றுமை
2. 3ம் வேற்றுமை
3. 4ம் வேற்றுமை
4. 5ம் வேற்றுமை

150. உயர்திணை இருபாற் பொதுப் பெயர்
1. மேதை 2. அரசன் 3. கள்வன் 4. மாணவி

151. பெயராகவும் வினையாகவும் அமையும் ஒரு சொல்
1. உண் 2. கல் 3. அழகு 4. அறிவு

152. நாம் மூத்தோர் சொன்ன வார்த்தையை மதித்து நடப்போம். என்ற வாக்கியத்தின் செயப்படுபொருள்
1. மூத்தோர் 2. மதித்து 3. வார்த்தையை 4. நாம்

153. பின்வருவனவற்றுள் ஆண், பெண் இரு பாற்கும் பொதுவாக வழங்காத சொல்
1. அறிவாளி 2. பாவி 3. வியாபாரி 4. நம்பி

154. ஆண்டு + திவசம் என்பதை புணர்த்தி எழுதினால்
1. ஆண்டிவசம் 2. ஆட்டைத்திவசம்
3. ஆண்டுவசம் 4. ஆண்திவசம்

155. "மலையிற் சிறியது குன்று" இவ் வாக்கியத்தில் "மலை" என்னும் பெயர் ஏற்றுள்ள வேற்றுமை
1. 5ம் வேற்றுமை 2. 7ம் வேற்றுமை
3. 3ம் வேற்றுமை 4. 6ம் வேற்றுமை

156. பின்வருவனவற்றுள் உவமைத் தொகை எது?
1. பவளவாய் 2. இரவுபகல்
3. சாரைப்பாம்பு 4. மரவேர்

157. பின்வருவனவற்றுள் இணைமொழி எது?
1. அணுஅணுவாய் 2. ஏழைஎளியவர்
3. சிரித்துச்சிரித்து 4. சுடச்சுட

158. பெயரெச்சம் இடம்பெறும் வாக்கியம்?
1. ஒதுங்கி நின்றான் 2. வந்து பார்த்தனர்
3. வந்த மாடு 4. வேகம் குறைந்தது

159. "இக்கடிதம் என் நண்பனால் அனுப்பப்பட்டது" என்பது
1. தன்வினை வாக்கியம் 2. பிறவினை வாக்கியம்
3. செய்வினை வாக்கியம் 4. செயப்பாட்டு வினை வாக்கியம்

160. "மக்களிடையே ஒற்றுமை ஓங்குக" இவ்வாக்கியம்
1. கூற்று வாக்கியம் 2. வினா வாக்கியம்
3. வியங்கோள் வாக்கியம் 4. வியப்பு வாக்கியம்

161. கைலை, இமயம், மந்தரம், விந்தம், நிடதம், ஏமகூடம், நீலகிரி, உதயகிரி என்பவற்றின் தொகைப்பெயர்
1. ஏழு கடல் 2. ஏழு மலை
3. ஏழு மேகம் 4. ஏழு வானம்

162. பாதம், செய்யுள் வரி என்ற இரண்டு கருத்துக்களையும் உணர்த்தும் சொல்
1. கால் 2. பாட்டு 3. அடி 4. மடி

163. கெடுதல் விகாரப் புணர்ச்சிக்கு உதாரணம்
1. மரவேர் 2. வாட்சமர்
3. கலைக்கல்லூரி 4. பூந்தொட்டி

164. சினை, கருமை, உட்பொருள், பிறப்பிடம் என்னும் கருத்துக்களைத் தரும் சொற்றொடர்
1. உரு 2. கரு 3. மறு 4. திரு

165. பின்வருவனவற்றுள் எழுத்துப் போலிக்கு உதாரணம் அல்லாதது எது?
1. கந்தல் 2. பந்தல் 3. சாம்பல் 4. தேசம்

166. "களிபேருவகை கொண்டேன் என்று சொன்னாள்" என்ற வாக்கியத்தில் வந்துள்ள சொற்கள்
1. பெயர், வினை, இடை, உரி என்பன
2. பெயர், வினை, இடை என்பன
3. பெயர், வினை, உரி என்பன
4. பெயர், இடை, உரி என்பன

167. பின்வருவனவற்றுள் "விளித்தொடருக்குப்" பொருத்தமான உதாரணம்
1. இராமன் சென்றான் 2. சென்ற இராமன்
3. சென்றான் இராமன் 4. இராமா வா

168. அவன் "உதைபந்தை" உதைத்தான். இங்கு உதைபந்து என்பது?
1. உம்மைத் தொகை
2. வினைத் தொகை
3. மூன்றாம் வேற்றுமைத் தொகை
4. பண்புத் தொகை

169. "எனது முடிவை மாற்ற மாட்டேன்" எனது உருபேற்ற பெயர்ச்சொல்
1. நாம் 2. நான் 3. நாங்கள் 4. அவன்

170. "இந்நூலை ஆக்கியவர் மணிவண்ணன்" இவ்வாக்கியத்தில் "ஆக்கியவர்" என்பது
1. தொழிற்பெயர் 2. ஆகுபெயர்
3. வினையாலணையும் பெயர் 4. பண்புப்பெயர்

171. "பஞ்சமா பாதகங்களைச் செய்யாதீர்கள்" இவ் வாக்கியம்
1. வியங்கோள் 2. வினா
3. கூற்று 4. ஏவல் வாக்கியம்

172. "யாகாவாராயினும் நாகாக்க வேண்டும்" இவ்வாக்கியம்
1. கூற்று 2. ஏவல்
3. வினா 4. வியங்கோள் வாக்கியம்

173. "மதியாதார் தலைவாசல் மிதியாதே" இவ்வாக்கியத்தின் எழுவாய்
1. நாம் 2. நீ
3. மதியாதார் 4. வாசல்

174. சுனாமிப் பேரலை ஏற்படுத்திய தாக்கம் மக்கள் மனதில் என்றும் .................................................. ஆழப்பதிந்துள்ளது.
1. புயலில் அகப்பட்ட கலம் போல 2. பூவும் மணமும் போல
3. மடைதிறந்த வெள்ளம் போல 4. பசுமரத்தாணி போல

175. திருவள்ளுவர் திருக்குறளை இயற்றினார். இவ்வாக்கியம்
1. செய்வினை 2. செயற்பாட்டு வினை
3. எதிர்மறை வினை 4. குறிப்பு வினை

176. மானுக்கு இளையது குட்டி என்பது போல "நெல்" இன் இளையது
1. தாளை 2. வடலி 3. நாற்று 4. மணி

177. மயில் அகவும் என்பது போல ஆந்தை

1. அலறும் 2. கத்தும் 3. சீறும் 4. முக்காரம்போடும்

178. பின்வருவனவற்றுள் இரட்டைக்கிளவியாக அமைந்து வரும் சொல்

1. அண்டை அயலார் 2. துணிமணி
3. தில்லுமுல்லு 4. நெறு நெறு

179. மா, புளி (காய்த்தொகுதி) "கொத்து" என்பது போல சோளம், நெல் என்பவற்றுக்கு

1. தாறு 2. கதிர் 3. கலை 4. சிற்பம்

180. வினா, பயன், மெய், உரு என்ற நான்கும் பற்றி உவமை தோன்றும் என்று குறிப்பிடப்பட்டவர்

1. நன்னூலார் 2. தொல்காப்பியனார்
3. ஆறுமுக நாவலார் 4. வீரசோழியம்

181. பண்ணுடன் உணர்வைப் பெய்யும் பசுங்கிளைக் குயில்கள்................ இதில் பசுங்கிளை என்பதை பிரித்தால்

1. பசு + கிளை 2. பசிய + கிளை
3. பசுமை + கிளை 4. பச்சை + கிளை

182. "வாழ்வின் கயமைகள் கழிய நாமோர் காவியம் பாடலாமே" இங்கு "கயமைகள்" என்பதன் ஒத்த பொருள்

1. துன்பங்கள் 2. கீழ்த்தரமான செயல்கள்
3. இன்பங்கள் 4. சண்டைகள்

183. "ஆரம் என்பு புனைந்த ஐயர்" தம் அன்பர்.................. இங்கு ஆரம் என்று கூறப்படுவது

1. எலும்பு 2. பூ 3. அழகு 4. மாலை

184. "உண்டான்" என்ற சொல்லில் உள்ள பகுபத உறுப்புக்கள்

1. பகுதி, விகுதி
2. பகுதி, இடைநிலை, விகுதி
3. பகுதி, விகுதி, சாரியை
4. பகுதி, விகுதி, சந்தி

185. பொன்னன் என்பது

1. பெயரெச்சம் 2. வினையெச்சம்
2. தெரிநிலைவினைமுற்று 4. குறிப்பு வினைமுற்று

186. "முகத் தாமரை பூத்த மலர்ச்சியுடையாள்" என்பதில் இடம்பெற்றுள்ள அணி

1. உவமையணி
2. உருவக அணி
3. தற்குறிப்பேற்ற அணி
4. உயர்வு நவிற்சியணி

187. பெயர்ச்சொல்லின் சிறப்பம்சம்

1. காலம் காட்டுதல்
2. செயலை உணர்த்தல்
3. பகுபதமாய் அமைதல்
4. வேற்றுமை ஏற்றல்

188. "கூலிக்கு மாரடித்தான்" என்பதில் "கு" உருபு உணர்த்தும் பொருள்

1. நிமித்த காரணகாரியப் பொருள்
2. ஒப்புப்பொருள்
3. முதற் காரணகாரியப் பொருள்
4. கருவிப்பொருள்

189. "இடக்கு முடக்கு" என்பது,

1. அடுக்குத் தொடர்
2. இரட்டைக் கிளவி
3. அடுக்கிடுக்குத் தொடர்
4. இணைமொழி

190. இருதிணை ஐம்பால் மூவிடத்துக்கும் பொதுவான தெரிநிலை வினைமுற்று

1. இல்லை 2. கூறுக 3. கூறுமின் 4. வந்தனை

191. **பொறுமை, மலை, அடக்கம், சுமை, பூமி என்னும் பல** பொருள்களை உணர்த்தும் ஒரு சொல்

1. வாகை 2. பொறை 3. வண்ணம் 4. விலங்கு

192. "கருங்குழல் ஆடினாள்" என்பது,

1. வேற்றுமைத் தொகை
2. உவமைத் தொகை
3. பண்புத் தொகை
4. அன்மொழித் தொகை

193. மொழிக்கு **இறுதியில்** மட்டும் நின்று வினாப் பொருளை உணர்த்தும் எழுத்து,

1. யா, ஆ 2. ஆ, ஓ 3. ஏ, எ 4. ஏ, யா

194. **MULTIMEDIA** என்பதற்கான தமிழ்ச்சொல்,
1. ஊடகம் 2. விசைப்பலகை
3. பல்லூடகம் 4. பண்பலை

195. பிற்காலத் தேவைக்காகச் சேகரித்து வைக்கப்படும் பொருள்
1. மானியம் 2. காப்புறுதி 3. நிதியம்
4. எய்ப்பில் வைப்பு

196. புராணக் கதைகளை சுவைபட **பிரசங்கம் செய்வோன்**
1. அதிகப்பிரசங்கி 2. வேதாந்நி
3. பௌராணிகன் 4. தேவராளன்

197. எவரது துணையுமின்றி தானே தனித்து நின்று பகைவரை வெல்லும் ஆற்றல் படைத்தவன்
1. போர்வீரன் 2. படைத்தளபதி
3. அசகாயசூரன் 4. மந்திரவாதி

198. 'முன்னூறு' என்ற சொல்லைத் திருத்தி எழுதினால்
1. முந்நூறு 2. முன்நூறு 3. முந்னூறு 4. மூன்றுநூறு

199. பயனிலை தொக்கு நிற்கும் வாக்கியம்
1. மழை பெய்தது 2. யானை கொன்றது
3. தொந்தி வயிறு ஆடியது 4. கற்றவருக்கு மூன்று கண்

200. "பாலாவது அல்லது பழமாவது கொண்டு வா" - இவ்வாக்கியத்தில் கருத்துச் சிதையா வண்ணம் நீக்கக் கூடிய சொல்
1. கொண்டு 2. பாலாவது 3. அல்லது 4. பழமாவது

201. புல் + பாய் என்பதைச் சேர்த்து எழுதினால்
1. புல் பாய் 2. புற்பாய் 3. புல்லுப் பாய் 4. புல்ப்பாய்

202. **பாடினான்** என்ற சொல்லின் பகுதி
1. பாடி 2. பாடு 3. ஆன் 4. இன்

203. "குயிலே! நம்பி மாதவன் இருக்குமிடம் கூறாயோ? இங்கு 'நம்பி' என்பதன் எதிர்ப்பாற் சொல்
1. நம்பாட்டி 2. நம்பிச்சி 3. நங்கை 4. தங்கை

204. **பொழில், தண்டலை,** கா என்பன குறிப்பது

1. சோலை 2. காடு 3. வண்டு 4. குளம்

205. அவதூறு வழக்கில் குற்றவாளியாகக் காணப்பட்ட நபருக்கு நீதவானால் விதிக்கப்பட்டது

1. அபராதம் 2. அபகாரம் 3. பரிகாரம் 4. அபகாறம்

206. கலைப்படைப்பொன்றின் நிறை குறைகளை ஆராய்தல்.................................... எனப்படும்

1. ஆய்வுரை 2.அணிந்துரை 3. விமர்சனம் 4. கண்டனம்

207. **நெல்லின் இளையது நாற்று என்பது போல பனையின் இளையது**

1. குட்டி 2. பிள்ளை 3. வடலி 4. கன்று

208. "உழையா அறம் வற்றிட ஊழ் வழுவுற்ற சீற்றம் விளையாத நிலத்து" இங்கு சீற்றம் என்பதன் ஒத்தகருத்துச் சொல்

1. மகிழ்ச்சி 2. கோபம் 3. அறமற்ற 4. நினையாத

209. " நரிகளும் குறளும் துன்றிக் கூடிய குழுவின் நாப்பண் குமரனைச் சென்று கண்டாள்" - இங்கு 'நாப்பண்' என்பதன் ஒத்தகருத்துள்ள சொல்

1. உண்மை 2. சுடலை 3. நடு 4. இரவு

210. "வானக்கடலில் வெள்ளியோடம் ஒன்று கண்டேன்". இங்கு "வானக்கடல்" என்பதில் உள்ள அணி

1. உயர்வு நவிற்சி
2. தன்மை நவிற்சி
3. உருவகம்
4. உவமை

211. "இன்றைக்குத் தேதி என்ன?" இதில் வந்துள்ள **தேதி** என்ற சொல்

1. வினைமுற்று
2. இடக்கரடக்கல்
3. மரூஉ
4. தகுதி

212. பன்மை விகுதி பெற்று வழங்கக் கூடிய சொல்

1. செலவு 2. மகிழ்ச்சி 3. நட்பு 4. தண்ணீர்

213. வேகமாக நடந்து வந்த பாட்டி ஓய்வெடுக்க விரும்பினாள்.இதிலுள்ள பெயரெச்சம்

1. எடுக்க 2. ஓய்வு 3. வந்த 4. நடந்து

214. இறந்தகால இடைநிலைகளாக வருவன

1. த், ட், ற் 2. அ, எ, உ 3. து, டு, று 4. கின்று, கிறு

215. "ஆகா இந்த கடற்கரை எத்துணை அழகாக காட்சியளிக்கிறது" இவ்வாக்கியம்

1. கூற்று 2. ஏவல்
3. வினா 4. உணர்ச்சி வாக்கியம்

216. மாணவர்கள் மனத்திருப்தியுடன் கல்வி கற்றனர். இவ் வாக்கியத்தில் காணப்படும் செயற்படுபொருள்

1. மனத்திருப்தி 2. கல்வி 3. கற்றனர் 4. மாணவர்கள்

217. மெய் எழுத்துக்களின் எண்ணிக்கையைத் தருக

1. 18 2. 12 3. 30 4. 216

218. குற்றெழுத்துக்கள் எவை?

1. க், ச், ட், த், ப், ற்
2. ய், ர், ல், வ், ழ், ள்
3. அ, இ, உ, எ, ஒ
4. ஆ, ஈ, ஏ, ஓ, ஔ

219. "காட்டில் மரங்கள் செழித்து வளர்ந்தன". இதில் எழுவாய் கூறு;

1. காட்டில் 2. செழித்து 3. வளர்ந்தன 4. மரங்கள்

220. "ஈசற்கு யான் வைத்த அன்பு" என்பது எத்தனையாம் வேற்றுமை மயக்கம்?

1. 7ம் வேற்றுமை 2. 4ம் வேற்றுமை
3. 5ம் வேற்றுமை 4. 1ம் வேற்றுமை

221. "தச்சனால் ஆக்கப்பட்ட மேசை" - 3ம் வேற்றுமை என்னபொருளில் வந்துள்ளது?

1. கருவி 2. உடமை 3. கருத்தா 4. உடனிகழ்ச்சி

222. "வந்தான்" என்பதில் பகுதியாக வருவது?

1. வந்து 2. வா 3. வந்தான் 4. வந்தது

223. "பாடினான்" என்பதில் வரும் இடைநிலை

1. ன் 2. இன் 3. ஆன் 4. அன

224. "அவன் பெரியன்" இதில் இடம்பெற்றுள்ள **பெரியன்** என்பது

1. தெரிநிலை வினை 2. குறிப்பு வினை
3. பெயரெச்சம் 4. வினையாலணையும் பெயர்

225. **அழுத பிள்ளை சிரித்தது**, இதில் இடம்பெற்றுள்ள **பெயரெச்சம**

1. அழுத 2. பிள்ளை 3. சிரித்தது
4. அழுத பிள்ளை

226. பின்வருவனவற்றில் வந்த திசைச்சொல்?

1. வனப்பு 2. சப்பாத்து 3. மல்லிகை 4. வெம்மை

227. "பங்கஜம்" என்னும் வட சொல்லைக் குறிக்கும் தமிழ்ச்சொல்

1. மல்லிகை 2. கனகாம்பரம் 3. குமுதம் 4. தாமரை

228. பிழையற்ற சொல்லின் கீழ்க் கோடிடுங்கள்,

1. முயற்ச்சித்தான் 2. முயர்ச்சித்தான்
3. முயற்சித்தான் 4. முயல்ச்சித்தான்

229. பிழையற்ற சொல்லின் கீழ்க் கோடிடுங்கள்,

1. பாவற்காய் 2. பாகற்காய் 3. பாவர்காய் 4. பாகர்க்காய்

230. அவன் ................................ வாங்கிய கடனை இன்னுந் திருப்பித் தரவில்லை.

1. கைமாறாக 2. கைமாத்தாக 3. கைமாற்றாக
4. கைம்மாறாக

231. மலையும் மலைசார்ந்த இடமும்,

1. குறிஞ்சி 2. மருதம் 3. முல்லை 4. நெய்தல்

232. பகையும் இன்றி, நட்பும் இன்றி நடுநிலையில் நிற்போர்,

1. தரகர் 2. முனிவர்
3. நொதுமலாளர் 4. தவிசாளர்

233. தென்னையின் இளங்காய் குரும்பை என்பது போல, பனையின் இளங்காய்,

1. கச்சல்　2. நுங்கு　3. வடு　4. மூசு

234. மாடுகள் பாதுகாப்பாகக் கட்டி விடப்படும் இடம்,

1. பட்டி　2. தொழுவம்　3. குடிசை　4. பந்தி

235. "தச்சன் மரத்தை அரிவித்தான்". இது

1. செய்வினை　2. செயப்பாட்டு வினை
3. தன்வினை　4. பிறவினை

236. பூனைக்குட்டி போல யானைக்கு:-

1. கன்று　2. பறள்　3. போதகம்　4. குருளை

237. படைவீரர் அணிபோல தோழியர்:-

1. கூட்டம்　2. குழு　3. ஆயம்　4. கும்பல்

238. தென்னைக்கு ஓலை போல ஈஞ்சுக்கு:-

1. ஓலை　2. தாள்　3. இலை　4. மூன்றுமலல

239. பனைக்கு நுங்கு போல வாழைக்கு:-

1. மூசு　2. கச்சல்　3. வடு　4. குரும்பை

240. முந்திரிக்கு குலை போல வாழைக்குலைக்கு:-

1. கொத்து　2. கதிர்　3. குலை　4. தாறு

241. பளிக்கு கொட்டை போல ஆமணக்குக்கு:-

1. மணி　2. விதை　3. முத்து　4. மூன்றும்

242. துவரைக்கு பருப்பு போல தோடைக்கு:-

1. சதை　2. அரிசி　3. பருப்பு　4. சுளை

243. மாட்டின் மலம் சாணம் போல யானையின் மலம்:-

1. விட்டை　2. இலண்டம்　3. பிழுக்கை　4. சாணம்

244. யானையின் பெண் பிடி போல புலியின் பெண்:-

1. பிணை　2. பிணா　3. பிடி　4. வடவை

245. "வளர்ந்தனன்" என்பதை பகுக்கும் போது முதலில் வரும் "அன்" குறிப்பது:-
1. சந்தி 2. இடைநிலை 3. சாரியை 4. விகாரம்

246. அரசனும் செல்வந்தரும் தமக்குக் கீழே சேவை புரிவோருக்கு அன்பளிப்பாக வழங்கும் நிலம்:-
1. கையுறை 2. நிந்தகம் 3. பதுமநிதி 4. குறுநிலம்

247. 'கீழே விழுந்த குழந்தை அழுத போதும் கண்ணகி வாளாவிருந்தாள்'. 'வாளா' என்பது:-
1. பெயர்ச்சொல் 2. வினைச்சொல்
3. இடைச்சொல் 4. உரிச்சொல்

248. எழுவாய் மறைந்து நிற்கும் வாக்கியம்:-
1. துறவிக்கு வேந்தன் துரும்பு
2. தருமம் தலை காக்கும்
3. அறஞ் செய விரும்பு
4. சிறு துரும்பும் பல் குத்த உதவும்

249. முந்நீர் என்பதைப் பிரித்தால்
1. மு + நீர் 2. முன் + நீர் 3. முந்து + நீர் 4. மூன்று + நீர்

250. வினைமுற்றாக அமைந்து வேற்றுமை ஏற்று வருவது
1. தொழிற்பெயர் 2. பெயரெச்சம்
3. தெரிநிலை வினைமுற்று 4. வினையாலணையும் பெயர்

251. செல்வமில்லாதவர் உலகத்திலே நடைப்பிணமாவர். இங்கு நடைப்பிணம் என்பதன் கருத்து:-
1. சோம்பேறிகள் 2. பயனற்றவர் 3. பேய்கள் 4. அநாதை

252. "தட்டுங்கள் திறக்கப்படும்" இவ்வாக்கியத்தின் எழுவாய்:-
1. தட்டுங்கள் 2. நீங்கள்
3. நீவிர் 4. திறக்கப்படும்

253. "தென்னன் பொருப்பிலே பிறந்து வைகை ஏட்டிலே தவழ்ந்தது தமிழ்மொழி". இங்கு பொருப்பு என்பதன் ஒத்தகருத்து
1. ஆறு 2. கடல் 3. சிவபெருமான் 4. மலை

254. யானை மேய்ப்பவனைப் பாகன் என்பது போல ஆடு மேய்ப்பவன்:-
1. ஆயன் 2. இடையன் 3. குறவன் 4. மறவன்

255. முருகக் கடவுள் சூரனைச்சங்காரம் செய்தார். இங்கு "சங்காரம்" என்பது

1. படைத்தல் 2. அழித்தல் 3. காத்தல் 4. சிருஷ்டித்தல்

256. பேரரசன் என்பதன் எதிர்பாற்கருத்துள்ள சொல்

1. அரசி 2. இளவரசி 3. பேரரசி 4. பெருமாட்டி

257. அப்பனுக்கு அம்மை போலத் "தொழும்பனுக்கு"

1. தொழுந்கை 2. தொழும்பை 3. தொம்மை 4. தொழுந்தி

258. பலாப்பழத்தின் உள்ளீடு "சுளை" என்பது போல மாதுளம்பழத்தின் உள்ளீடு:-

1. விதை 2. சதை 3. முத்து 4. பருக்கை

259. கிருஷ்ண அவதாரங்களை இப்படியாக அழைப்பர்:-

1. நவஅவதாரம் 2. அட்டாவதாரம்
3. நரசிம்மஅவதாரம் 4. தசாவதாரம்

260. எழுபத்தைந்தாவது ஆண்டில் எடுக்கப்படுவது பவளவிழா போல இருபத்தைந்தாவது ஆண்டில் எடுப்பது:-

1. பொன்விழா 2. வெள்ளிவிழா
3. மணிவிழா 4. வைரவிழா

261. புலவர்கள் கூடித் தம் ஆக்கங்களைப் பற்றி ஆராயுமிடம்:-

1. சங்கம் 2. பட்டிமன்றம் 3. கவியரங்கம் 4. நீதிமன்றம்

262. தொன்றுதொட்டு வழக்கில் உள்ள பெயர் இன்னொன்றுக்கு ஆகி வரும் போது அது

1 அன்மொழித்தொகை 2. ஆகுபெயர்
3. தொழிற்பெயர் 4. இடவாகுபெயர்

263. இராப்பகல் என்பது

1. வினைத்தொகை 2. உவமைத்தொகை
3. அன்மொழித்தொகை 3. உம்மைத்தொகை

264. "பவளவாய்" என்பது

1. பண்புத்தொகை 2. அன்மொழித்தொகை
3. வினைத்தொகை 4. வினையாலணையும் பெயர்

265. "அஞ்சல் மட அன்னமே" இங்கு "அஞ்சல்" என்பதில் வந்துள்ள "அல்" என்னும் விகுதி

1. எதிர்மறை வினைமுற்று
2. உடன்பாடு
3. குறிப்புவினை
4. தெரிநிலைவினை

266. காலம் வெளிப்படையாகத் தெரிய வருவது

1. குறிப்புவினை
2. தெரிநிலைவினை
3. எதிர்மறைவினை
4. உடன்பாட்டுவினை

267. தமிழில் உள்ள எழுத்துக்களின் தொகை

1. பன்னிரண்டு
2. பதினெட்டு
3. இருநூற்றுப் பதினாறு
4. இருநூற்று நாற்பத்தேழு

268. வாழை + பழம் என்பதைப் புணர்த்த வருவது

1. தோன்றல்
2. திரிதல்
3. கெடுதல்
4. இயல்பு

269. காலத்தை உணர்த்தாத இடைநிலை

1. கின்று, கிறு
2. ப், வ்
3. ஞ், ய்
4. த், ட்

270. இலங்கையின் வடக்கில் யாழ்ப்பாணம் இருக்கிறது. இதில் வந்துள்ள 5ம் வேற்றுமை உருபு:-

1. நீக்கப் பொருளில்
2. எல்லைப் பொருளில்
3. ஒப்புப் பொருளில்
4. ஏதுப் பொருளில்

271. தந்தை, தாய், என்பவை

1. பொதுப்பெயர்
2. இருதிணைப் பொதுப்பெயர்
3. படர்க்கைப் பெயர்
4. தன்மைப் பெயர்

272. "உருட்டும் புரட்டும் ஒடுக்கும் சிறப்பை" என்னும் பழமொழியின் எழுவாய்

1. உருட்டும்
2. புரட்டு
3. உருட்டும் புரட்டும்
4. சிறப்பை

273. "கற்றோர்க்கு சென்றவிடமெல்லாம் சிறப்பு" என்னும் வாக்கியத்தின் பயனிலை:-

1. தோன்றா பயனிலை
2. சிறப்பு
3. பயனிலை இல்லை
4. சென்றவிடமெல்லாம்

274. இருதிணை ஐம்பால் மூவிடப் பொதுவாக வரும் வினைச்சொல்:-
1. ஏவல் 2. வியங்கோள் வினை
3. பிறவினை 4. செயப்பாட்டு வினை

275. மெல்லெழுத்து வல்லெழுத்தாகிப் பிறவினையாய் அமைந்த சொல்:-
1. பாய்தல் 2. பாய்ச்சுதல் 3. திருத்துதல் 4. திருந்துதல்

276. "வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனும் ஓங்குக". இங்கு கோடிடப்பட்ட சொற்கள்
1. ஏவல் 2. வியங்கோள்
3. எதிர்மறை 4. செய்வினை

277. "முயற்சி திருவினையாக்கும்" என்பது
1. ஏவல் வாக்கியம் 2. வினா வாக்கியம்
3. செப்பு வாக்கியம் 4. உணர்ச்சி வாக்கியம்

278. தனித்துப் பொருள் தராத சொல்
1. பெயர் 2. வினை 3. இடை 4. உரி

279. பின்வருவனவற்றுள் உடன்பாடாகவும், எதிர்மறையாகவும் வந்த ஏவல் வினைமுற்று
1. எழுவீர் 2. வாராய் 3. செவ்வாய் 4. வம்மின்

280. ஏவலைக் கொள்ளும் வாக்கியம் ...................... ஆகும்
1. வியங்கோள் 2. ஏவல் 3. வாழ்த்தல் 4. வைதல்

281. "கப்பல் செலுத்துவோன் மீகாமன்" என்பது போல விமானம் செலுத்துவோன்
1. வலவன் 2. பாகன் 3. சாரதி 4. மாலுமி

282. நாயின் ஆண்பால் கடுவன் என்பது போல நண்டின் ஆண்பால்
1. கடா 2. கடுவன் 3. அலவன் 4. போத்து

283. ஒன்றைக் குறித்து வஞ்சினம் சொன்ன சொல்:-
1. பரம்பரை 2. அறிவுரை 3. சூளுரை 4. சாபம்

284. வெளிப்படையான பொருளில் புகழ்ந்தும் மறைபொருளில் இகழ்ந்தும் கூறுவது
1. அங்கதம் 2. கண்டனம்
3. இரட்டுற மொழிதல் 4. உயர்வு நவிற்சி

285. தரப்பட்ட தொடர் வகைக்குப் பொருந்தாத ஒரு தொடர் இடம்பெறும் வரிசை
1. எழுவாய்த் தொடர் - திப்பு பாடினான், குயில் கூவியது, மயில் ஆடியது
2. பெயரெச்சத் தொடர் - பாடிய திப்பு, கூவிய குயில்,ஆடியமயில்
3. உரிச் சொற்றொடர் - நனிபேதை, உறுமீன், இனிவருவேன்
4. வினையெச்சத்தொடர் - பாடி முடித்தான், கூவிச்சென்றது, ஆடி மகிழ்ந்தது

286. "பசி வந்தால் பத்தும் பறந்து போம்" இங்கு பத்து என்பது
1. முதலாகு பெயர் 2. அளவையாகு பெயர்
3. உவமையாகு பெயர் 4. பண்பாகு பெயர்

287. "வன்சொல் துன்பம் தரும்" வன்சொல் என்பது
1. பண்புத்தொகை
2. உவமைத் தொகை
3. வேற்றுமைத் தொகை
4. அன்மொழித் தொகை

288. அன்னாசிப்பழம் ஒன்றை வாங்கி உண்டாள். இங்கு அன்னாசி
1. வடசொல் 2. திசைச்சொல்
3. இயற்சொல் 4. திரிசொல்

289. "குளோனிங் (Cloning)" என்பதற்கு பொருத்தமான கலைச்சொல்
1. இனப்பெருக்கம் 2. கருகட்டுதல்
2. படியாக்கம் 4. கருஉற்பத்தி

.290. தண்ணீர் என்பதை பிரித்தெழுதினால் வருவது
1. தண் + நீர் 2. தண் + ணீர்
3. தண்மை + ணீர் 4. தண்மை + நீர்

291. கலை + ஆசாரம என்பதை சேர்த்தெழுதினால்?
1. கலாச்சாரம் 2. கலாஆசாரம்
3. கலாசாரம் 4. கலையாசாரம்

292. எழுத்துச் சீர்திருத்தங்களுக்குள்ளான எழுத்துக்களுள் ஒன்று
1. லை 2. மை 3. ருது 4. யா

293. "இன்று மழை பெய்யவில்லை" என்ற வாக்கியம் குறிப்பது
1. உடன்பாட்டு வாக்கியத்தை
2. எதிர்மறை வாக்கியத்தை
3. செயற்பாட்டுவினை வாக்கியத்தை
4. தன்வினை வாக்கியத்தை

294. "புகழேந்தியால் நளவெண்பா இயற்றப்பட்டது". இவ்வாக்கியம் குறிப்பது?
1. செய்வினை வாக்கியம் 2. செயப்பாட்டுவாக்கியம்
3. தன்வினை 4. பிறவினை

295. பகாப்பதச் சொல்லுக்கு உதாரணம்?
1. மண் 2. அறிஞன் 3. கூனி 4. கவிஞன்

296. மொழிக்கு முதலில் வரக்கூடிய உயிர்மெய் எழுத்துக்களாவன
1. ஊ, ஐ, ஔ 2. ச, எ, ஞ 3. க், ப், ல் 4. ம, ந, ப

297. வாழ் + நாள் என்பதை சேர்த்தெழுதினால்
1. வாநாள் 2. வானாள் 3. வாணாள் 4. வாழுநாள்

298. நரேந்திரன் என்பதைப் பிரித்தெழுதினால்
1. நரன் + இந்திரன் 2. நரே + இந்திரன்
3. நரேந்து + இரன் 4. நர + இந்திரன்

299. "ஊர்வாயை மூட உலை மூடி இல்லை" என்பதில் ஊர் என்பது
1. உவமையாகுபெயர் 2. இடவாகுபெயர்
3. சினையாகுபெயர் 4. காலவாகுபெயர்

300. "நான் பெற்ற இன்பம் பெறுக இவ் வையகம்" என்னும் வாக்கியத்தின் எழுவாய்?
1. நான் 2. இன்பம்
3. வையகம் 4. தோன்றாமல் இருக்கிறது

301. தமயந்தி செந்தாமரை பூக்களைப் பறித்தாள். இங்கு செந்தாமரை குறிப்பது

1. வினைத்தொகை
2. அன்மொழித்தொகை
3. உம்மைத்தொகை
4. பண்புத்தொகை

302. சபையிற் சொல்லத் தகாத சொல்லை மறைத்து வேறொரு சொல்லால் சொல்வது

1. இடக்கரடக்கல் 2. மரூஉ 3. குழூஉக்குறி 4. மங்கலம்

303. இலக்கணப் போலிக்கு உதாரணம்

1. அருமந்த
2. வாய்க்கால்
3. பாதகி
4. நன்காடு

304. பெயரெச்சமும் வினையெச்சமும் சேர்ந்து நிற்கும் வாக்கியம்

1. பயந்து ஒதுங்கி நின்றான்
2. பாய்ந்து வந்த மாடு
3. விரைந்து வந்து பார்த்தனர்
4. வேகம் குறைந்த வண்டி

305. "அரண்மனைச் சிலம்பன்று என்சிலம்பே" இதில் வந்துள்ள "ஏ" கார இடைச்சொல்

1. ஐயம் 2. தேற்றம் 3. எண் 4. பிரிநிலை

306. "கள்ளக் கணபதி வெள்ளைப் பூனையை வெட்டிக்கொன்றான்". இதில் செயற்படுபொருள் அடைமொழி

1. கணபதி 2. பூனை 3. வெள்ளை 4. வெட்டி

307. பின்வருவனவற்றுள் சிலேடை அல்லாதது

1. கொஞ்சலாம்பெண்ணை
2. நம்பிக்கை வை
3. காசாலேசா
4. வாலா ஐந்தா

308. அஃறிணை என்னும் பதத்தை பிரித்தால்

1. அஃது + திணை
2. அல் + திணை
3. அ + திணை
4. அஃ + திணை

309. பின்வருவனவற்றுள் பலர்பால் விகுதிகள் மட்டும் உடையது

1. அன், ஆன், அர், ஆர்
2. து, று, டு, ர்
3. து, று, டு, ர்
3. அர், ஆர், மார், கள்

310. காரண இடுகுறிப்பெயராக அமைவது
1. நாற்காலி 2. மரங்கொத்தி
3. பறவை 4. காற்குடி

311. கருவி, கருத்தா, உடனிகழ்ச்சிப் பொருளில் வரும் வேற்றுமை
1. 1ம் வேற்றுமை 2. 8ம் வேற்றுமை
3. 3ம் வேற்றுமை 4. 4ம் வேற்றுமை

312. ஒரு வினைமுற்று, அவ்வினை முதலில் தொழில் முடிந்திருத்தலை
1. சிலவேளை காட்டும் 2. காட்டாது
3. காட்டும் 4. பலவேளை காட்டாது

313. பின்வரும் சொற்களில் உகரத்தின் மாத்திரை குன்றாத சொல்
1. சங்கு 2. கதவு 3. ஆடு 4. அஃது

314. "உன் மனத்திருள் நீங்குக". இங்கு "நீங்குக" என்பது
1. முன்னிலை வினைமுற்று 2. ஏவல் லினைமுற்று
3. வியங்கோள் வினைமுற்று 4. எதிர்மறை வினைமுற்று

315. "இமையவர் போற்றி செய்ய மன்னவனாக யானே சூட்டுவன் மகுடம்". இதிலுள்ள செயப்படுபொருள்
1. இமையவர் 2. மன்னவனாக
3. யானே 4. மகுடம்

316. "அவர் பொருட்டு எல்லோர்க்கும் பெய்யும் மழை". இதில் இடம்பெற்றுள்ள வேற்றுமை
1. 2ம் வேற்றுமை 2. 3ம் வேற்றுமை
3. 4ம் வேற்றுமை 4. 5ம் வேற்றுமை

317. பின்வருவனவற்றுள் இருவேறு எழுவாய் தொக்குநிற்கும் வாக்கியம் எது?
1. சரியாகச் செய் அல்லது அடி வாங்குவாய்
2. ஓடினான் : ஆடினான் : பாடினான்
3. தொலைந்து போய்விட்டதா? போகட்டும்
4. பாடு, ஆடுகிறேன்

318. "நெல்லுக்கு இறைத்த நீர் வாய்க்கால் வழியோடி புல்லுக்கும் ஆங்கே பொசியும்". இங்கு பெயரெச்சமாக வருவது:-
1. இறைத்த 2. ஓடி 3. புல்லுக்கும் 4. பொசியும்

319. "சீதையைப் பெற்றேன் உன்னைச் சிறுவனாகப் பெற்றேன்". இங்க "பெற்றேன்" என்பது காலங்காட்டுவது
1. ஏன் என்ற விகுதி மூலம் 2. "ற்" என்ற இடைநிலை மூலம்
3. பகுதி இரட்டித்தல் மூலம் 4. பெறு என்ற வினையடி மூலம

320. பின்வருவனவற்றுள் பொதுமொழியாக வந்துள்ள சொல்
1. மங்கை 2. தாரகை 3. முருங்கை 4. பலகை

321. வினையாக மட்டும் வரும் சொல்
1. ஓடு 2. தேடு 3. ஆடு 4. பாடு

322. சந்தையில் சமையற்காரர் நூறு தேங்காய் வாங்கினார். இதில் இடம்பெற்றுள்ள பால்பகா அஃறிணைப் பெயர்
1. சமையற்காரர் 2. நூறு
3. சந்தை 4. தேங்காய்

323. "பூச்சியோடும் பல கதை பேசலாமே" _ இதில் இடம்பெற்றுள்ள வேற்றுமை
1. 6ம் வேற்றுமை 2. 3ம் வேற்றுமை
3. 5ம் வேற்றுமை 4. 8ம் வேற்றுமை

324. "நீடிய அம்பலத்தினில் ஆடுவார் அடி சூடுவார்". இங்கு ஆடுவார் என்பது
1. வினையாலணையும் பெயர் 2. தெரிநிலை வினைமுற்று
3. தொழிற்பெயர் 4. பெயரெச்சம்

325. "பற்றுமின் கடிதின் நெடும் பார் மிசை எற்றுமின்" இங்கு இடம் பெற்றுள்ள ஏவல் வினைமுற்று விகுதி
1. மின் 2. இன் 3. மிசை 4. பார்

326. பின்வருவனவற்றுள் இடைநிலை உறுப்பு இடம் பெறாத சொல்
1. கண்டான் 2. அறிஞன் 3. ஓடினான் 4. உண்மை

327. வேகமாக நடந்து வந்த பெரியவர் ஓய்வு எடுக்க விரும்பினார். இதிலுள்ள பெயரெச்சம்

1. நடந்து 2. வந்த 3. ஓய்வு 4. எடுக்க

328. "பிறைநுதல் வியர்வை சிந்த ராதை ஓடி வந்தாள்" இங்கு பிறைநுதல் என்பது?

1. அன்மொழித்தொகை
2. வேற்றுமைத்தொகை
3. உவமைத்தொகை
4. உம்மைத்தொகை

329. வினைச்சொல்லின் காலங்காட்டாத ஓர் உறுப்பு

1. பகுதி 2. விகுதி 3. இடைநிலை 4. சாரியை

330. தமிழ் எழுத்துக்களில் மிக அருமையாகப் பயன்படுத்தப்படும் எழுத்து

1. உயிரெழுத்து
2. மெய்யெழுத்து
3. உயிர்மெய்யெழுத்து
4. ஆய்த எழுத்து

331. "பகலிற் பக்கம் பார்த்துப்பேசு இரவில் அதுதானும் பேசாதே" இங்கு பேசு, பேசாதே என்பன முறையே

1. செய்வினை, செயப்பாட்டுவினை
2. தன்வினை, பிறவினை
3. உடன்பாட்டுவினை, எதிர்மறைவினை
4. வியங்கோள்வினை, ஏவல்வினை

332. "நல்லார் ஒருவர் உளரேல் அவர் பொருட்டு எல்லார்க்கும் பெய்யும் மழை" என்ற வாக்கியத்தின் எழுவாய்

1. நல்லார் 2. ஒருவர் 3. அவர் 4. மழை

333. "ஊரார் பிள்ளையை ஊட்டி வளர்த்தால் தன் பிள்ளை தானே வளரும்" என்ற பழமொழியில் வந்துள்ள சொற்கள்

1. பெயர், வினை, உரி என்பன
2. பெயர், வினை, இடை என்பன
3. பெயர், வினை என்பன
4. பெயர், உரி, இடை என்பன

334. பின்வருவனவற்றுள் எழுத்துப்போலிக்கு உதாரணம்
1. தேசம் 2. மையல் 3. நேயம் 4. சாம்பர்

335. தோன்றல் விகாரப் புணர்ச்சிக்கு உதாரணம்
1. மட்பாண்டம் 2. காலைக்கதிரவன்
3. நீல வானம் 4. கடலலை

336. "உறுபசி தீர்ப்பாய் என்று எண்ணி வந்தேன்" என்ற வாக்கியத்தில் வந்துள்ள சொற்கள்
1. பெயர், வினை, இடை, உரி என்பன
2. பெயர், வினை, இடை உன்பன
3. பெயர், வினை, உரி என்பன
4. பெயர், இடை, உரி என்பன

337. பின்வருவனவற்றுள் விளித்தொடருக்கு பொருத்தமான உதாரணம்
1. பரதன் வந்தான் 2. வந்தான் பரதன்
3. வந்த பரதன் 4. பரதா! வா.

338. தரப்பட்ட சொல்வகைக்குப் பொருந்தாத ஒரு சொல் இடம்பெறும் வரிசை
1. தன்மை வினைமுற்று - வந்தேன், வருகிறேன், பாடினோம்
2. முன்னிலை வினைமுற்று - வந்தாய், படித்தீர், பாடுகின்றாய்
3. படர்க்கை வினைமுற்று - வந்தான், வருகின்றான், வந்தது
4. வியங்கோள் வினைமுற்று - வாழிய, வளரும், வளர்க

339. அவன் கூலி வேலை செய்கின்றான். இதில் "கூலிவேலை" என்பது
1. பண்புத்தொகை 2. 4ம் வேற்றுமைத்தொகை
3. 3ம் வேற்றுமைத்தொகை 4. உம்மைத்தொகை

340. "என்ன நடந்தாலும் எமது கொள்கையைக் கைவிடமாட்டோம்". "எமது" என்பதில் உருபேற்ற பெயர்ச்சொல்
1. நான் 2. எம் 3. நாம் 4. நாங்கள்

341. "இக் கவிதை பாரதியாரால் பாடப்பட்டது" என்ற வாக்கியத்தில் "பாடப்பட்டது" என்பது
1. பிறவினை 2. செயப்பாட்டுவினை
3. எதிர்மறை 4. செய்வினை

342. பின்வருவனவற்றுள் "ஐயோ" எனும் இடைச்சொல் வியப்புப்பொருளை உணர்த்தி நிற்கும் வாக்கியம்

1. "ஐயோ என் அருமைச் செல்வனை அரவந் தீண்டி விட்டதே!"
2. "ஐயோ, கரடியொன்று திறந்த வாயுடன் வருகின்றதே!"
3. "ஐயோ, அவர் இறந்து விட்டாரே? இனி என் செய்வோம்!"
4. "ஐயோ, இக் கார்மேகவண்ணனாம் இராமனின் அழகே அழகு!"

343. தமிழ் இலக்கண மரபுக்கமைய மொழிக்கு முதலில் பயின்று வராத எழுத்துக்கள்

1. ஒ, ஈ, ஔ
2. ஞா, யோ, யௌ
3. மை, நை, தை
4. வு, னை, யி

344. பகுதி இரட்டித்துக் காலங் காட்டுவன

1. உண்டான், கண்டான்
2. வாழ்க, வீழ்க
3. உண்பான், பாடுவான்
4. புக்கான், விட்டான்

345. வினைச்சொல்லாகவும் இடைச்சொல்லாகவும் வரக்கூடியது

1. வில்
2. கொல்
3. நில்
4. சொல்

346. வேற்றுமை உருபை ஏற்காத சொல்

1. இனி
2. யாம்
3. கனி
4. நடந்தவன்

347. "இறைவனை வழிபடாத வாணாள் முழுவதும் வீணே!" இங்கு வாணாள் என்பது

1. இலக்கணப்போலி
2. மரூஉ
3. இடக்கரடக்கல்
4. குழூஉக்குறி

348. கடற்காற்று உடலுக்கு இதமாக இருந்தது. இங்கே 'கடற்காற்று' என்பது

1. வினைத்தொகை
2. பண்புத்தொகை
3. வேற்றுமைத்தொகை
4. அன்மொழித்தொகை

349. எள் + நெய் என்பதைப் புணர்த்தினால் வரும் புணர்மொழி வடிவம்

1. எண்ணெய்
2. எள்நெய்
3. எண்னெய்
4. எண்நெய்

350. வாக்கியத்தில் எதிர்மறை வினையை அல்லாமல் வேறு வினையை ஏற்காதது

1. ஒருநாள்
2. ஒவ்வொருநாளும்
3. ஒரேநாள்
4. ஒருநாளும்

351. தரப்பட்ட சொல் வகைக்கு பொருந்தாத ஒரு சொல் இடம்பெறும் வரிசை

1. பெயர்ச்சொல் - கொழும்பு, பாடசாலை, மாணவன்
2. வினைச்சொல் - ஓடினான், ஓடும், ஓட்டம், நடனம்
3. உரிச்சொல் - சால, உறு, தவ, நனி
4. இடைச்சொல் - கின்று, ஆன், அது, தோறும்

352. "வண்டின் கால்" என்ற தொடரில் வண்டின் என்பதில் வந்த "இன்"

1. வேற்றுமை உருபு
2. சாரியை
3. விகுதி
4. இடைநிலை

353. வினைச்சொல்லிலே காலங்காட்டும் ஓர் உறுப்பு

1. பகுதி
2. விகுதி
3. சாரியை
4. இடைநிலை

354. "மன்னன் கோன்முறை அரசு செய்க." இவ்வாக்கியத்திலே உள்ள "செய்க" என்பது

1. வினையெச்சம்
2. பெயரெச்சம்
3. வினையாலணையும் பெயர்
4. வியங்கோள் வினைமுற்று

355. பெயர்ச்சொல்லும் வினைச்சொல்லும் தொடர்ந்து நிற்கும் தொடர்மொழி

1. பாற்சோறு
2. நிலம் பிளந்தது
3. கார் கூந்தல்
4. மற்றொன்று

356. "பாண்டவர்க்குத் தூது நடந்தானை ஏத்தாத நாவென்ன நாவே" இங்கே "நடந்தான்" என்பது

1. வினையாலணையும் பெயர்
2. இறந்த கால வினைமுற்று
3. குறிப்பு வினைமுற்று
4. காலங்காட்டுந் தொழிற் பெயர்

357. பின்வருவனவற்றுள் வாக்கியமாக அமைவது

1. சும்மா
2. போ
3. பறவை
4. நனி

358. பின்வருவனவற்றுள் எழுவாயும் செயப்படுபொருளும் தொக்கு நிற்கும் வாக்கியம்

1. வேகமாகப் படி
2. உண்மை பேசு
3. கடைக்குப் போ
4. நன்றாய்ப் படி

359. பன்மையில் வழங்காத ஒரு சொல்

1. மழை 2. பயன் 3. நாள் 4. காலம்

360. குயில்கூவுவது போல மயில்

1. கூவும் 2. அலறும் 3. கீச்சிடும் 4. அகவும்

361. தென்னையின் இளையது தென்னம்பிள்ளை போல பனையின் இளையது

1. கன்று 2. குட்டி 3. நாற்று 4. வடலி

362. இரப்பவர்க்கு இல்லையென்னாது கொடுப்பவன் ............................ எனப்படுவான்

1. இரவலன் 2. அதிதி
3. விருந்து வழங்கி 4. வள்ளல்

363. மிளகாய்க்கு விதை போல ஆமணக்குக்கு

1. பருப்பு 2. கொட்டை 3. வித்து 4. முத்து

364. ஆடுமேய்ப்பவன் இடையன் எனப்படுவது போல ஆனை மேய்ப்பவன் ....................................... எனப்படுவான்

1. ஆயன் 2. வலன் 3. பாகன் 4. மேய்ப்பவன்

365. பின்வருவனவற்றுள் இலக்கணப் போலியாய் அமைந்த தொடர்

1. நுனிப்புல் 2. இன்சொல் 3. நடுகல் 4. கார்முகில்

366. அருளுடையார் எல்லாம் உடையார், அருளிலார் எண்ணுடையேரேனும் இலர் - இதில் வந்த பொருளணி

1. எடுத்துக்காட்டுவமை 2. வேற்றுமைப்பொருள் வைப்பு
3. உயர்வு நவிற்சி 4. வேற்றுமை

367. "அஞ்சாத நெஞ்சத்து ஆடவருக்கு ஒரு மரணம்" அதில் மறைந்து வந்த வாக்கிய உறுப்பு

1. எழுவாய் 2. பயனிலை
3. செயப்படுஅபாருள் 4. இவை மூன்றும்

368. "அறத்தால் வருவதே இன்பம்" அதில் ஏகார இடைச்சொல் தந்த பொருள்

1. தேற்றம் 2. வினா 3. எதிர்மறை 4. அசைநிலை

369. பின்வருவனவற்றுள் பெண்பாலை மாத்திரம் உணர்த்துவது
1. புத்திசாலி 2. தேமொழி 3. தேன்மொழி 4. தேயுமொழி

370. பின்வருவனவற்றுள் உடனிலை மெய்மயக்கம் அல்லாதது
1. அப்பம் 2. சத்தம் 3. பட்டம் 4. சங்கு

371. பல பொருள் குறிக்கும் உரிச்சொல்
1. கடி 2. சால 3. உறு 4. தவ

372. முகிலைக்கிழித்து மதியினை முட்டும் மாடங்களையுடைய வீதியில் வீதிவிடங்கன் சென்றான். இதில் வந்துள்ள அணி
1. உவமை 2. உயர்வுநவிற்சி
3. உருவகம் 4. தற்குறிப்பேற்றம்

373. வன்றொடர்க் குற்றியலுகரத்திற்கு ஓர் உதாரணம்
1. கொக்கு 2. வண்டு 3. சால்பு 4. நாகு

374. பின்வருவனவற்றுள் தமிழில் கலந்து வந்த ஒல்லாந்து மொழிச்சொல்
1. குசினி 2. சலவை 3. கப்பி 4. சாக்கு

375. மகனை இழந்த சந்திரமதி கண்ணீருங் கம்பலையுமாகக் காணப்பட்டாள். இதில் வரும் "கண்ணீருங்கம்பலையும்" என்பது
1. உவமைத்தொடர் 2. மரபுத்தொடர்
3. இரட்டைக்கிழவி 4. இணைமொழி

376. " சிவகாந்தன் பாடசாலையில் இருந்து விலகினான்" என்னும் தொடரில் வரும் "இல்" உருபு உணர்த்தும் பொருள்
1. நீங்கல் 2. ஒப்பு 3. எல்லை 4. ஏது

377. திரிதல் விகாரப் புணர்ச்சிக்கு உதாரணமாகக் கொள்ளத்தக்கது
1. பாடசாலை + கீதம் 2. நீலம் + மலர்
3. மண் + சட்டி 4. பலா + பழம்

378. பின்வருவருவனவற்றுள் அகச்சுட்டு அல்லாதது
1. அவன் 2. அம்மனிதன் 3. இவர் 4. உது

379. பின்வருவனவற்றுள் ஆண்பாலுக்கும் பெண்பாலுக்கும் பொதுவாக இக்காலத்தில் வழங்கி வரும் சொல்
1. சனாதிபதி 2. தையல் 3. மகடூஉ 4. அரிவை

380. "ஆதிபகவன் முதற்றேயுலகு" என்னுந் தொடரில் ஏகார இடைச் சொல்லின் பொருள்:-
   1. வினா  2. தேற்றம்  3. எதிர்மறை  4. பிரிநிலை

381. "பனையாலே விழுந்தவனை மாடேறிமிதித்தது" இதில் "பனையாலே" என்பதில் மயங்கிய உருபு யாது?
   1. 2ம் வேற்றுமை  2. 3ம் வேற்றுமை
   3. 5ம் வேற்றுமை  4. 7ம் வேற்றுமை

382. "கசகச" என்ற இரட்டைச் சொல் குறித்து நிற்கும் பொருள்
   1. ஈரலிப்பு  2. விரைவு  3. சினம்  4. பயம்

383. "திங்கள் முடி சூடும் மலை எங்கள் மலை" இங்கு வந்துள்ள அணி
   1. தற்குறிப்பேற்ற அணி  2. உயர்வுநவிற்சி அணி
   3. உவமையணி  4. உருவக அணி

384. திகதியைத் 'தேதி' எனக் குறிப்பிடுவது
   1. மங்கலம்  2. மரூஉ
   3. இடக்கரடக்கல்  4. குழூஉக்குறி

385. "யான் வந்தான்" என்பது என்ன வழு:
   1. திணைவழு  2. பால் வழு  3. கால வழு  4. இட வழு

386. முதல் எழுத்து ஒன்றி வர அமைக்கப்படுவது
   1. சிலேடை  2. எதுகை  3. மோனை  4. மடக்கு

387. கோப்பையில் சோறு இருந்தது. கோப்பை என்பது
   1. மலையாள மொழி  2. போர்த்துக்கேய மொழி
   3. ஒல்லாந்த மொழி  4. பிரெஞ்சு மொழி

388. ஐந்தாம் வேற்றுமைப் பொருளில் வராத வாக்கியம்
   1. வீரத்தில் சிறந்தவன்
   2. கொழும்பின் வடக்கு நீர் கொழும்பு
   3. பாடசாலையின் விலகினான்
   4. பொந்தில் வாழும் குருவி

389. ஆற்று நீர் "சலசல" என்ற ஓடியது
1. அடுக்கு மொழி 2. இரட்டை மொழி
3. இணைமொாழி 4. மரபுத்தொடர்

390. பின்வருவனவற்றுள் வந்த குற்றியலுகரச் சொல்
1. நெல்லு 2. கதவு 3. ஆண்டு 4. வாயு

391. பின்வருவனவற்றுள் பயனின்மைப் பொருளில் வரும் இடைச் சொல்
1. மற்று 2. மன் 3. தோறும் 4. வாளா

392. **கோபாலன் துஞ்சினார்.** இதில் வரும் **துஞ்சினார்** என்பது
1. குழூஉக்குறி 2. மங்கலம்
3. இடக்கரடக்கல் 4. மரூஉ

393. "மால்கரி காத்தளித்த மாலுடைய மாலை சூழ் மால் வரைத் தோள் ஆதரித்த மாலையார் - மால் இருள்சூழ்" எனத் தொடர்ந்து வரும் பாடல் பின்வருவனவற்றுள் என்ன அணி
1. உவமை அணி 2. சொல்லின் பின் வருநிலையணி
3. தற்குறிப்பேற்ற அணி 4. உருவக அணி

394. 'பொற்றொடி' என்பது
1. வினைத்தொகை 2. பண்புத்தொகை
3. உம்மைத்தொகை 4. அன்மொழித்தொகை

395. "இரு நோக்கு இவளுண்கண் உள்ளது". இது
1. எண் வழுவமைதி 2. திணை வழுவமைதி
3. பால் வழுவமைதி 4. இட வழுவமைதி

396. இறைவனைத் தோழனாகக் கருதி அன்பு செய்யும் நெறி .......................... எனப்படும்
1. சன்மார்க்கம் 2. சகமார்க்கம்
3. சற்புத்திர மார்க்கம் 4. தாசமார்க்கம்

397. ஒரு நூலுக்கு நூலாசிரியன் அல்லாத மற்றொருவர் வழங்கும் புகழுரை .................................. எனப்படும்
1. முகவுரை 2. முன்னுரை 3. விதப்புரை 4. அணிந்துரை

398. "கால்கோள்" என்பதன் கருத்து

1. புயற்காற்று　　2. காலைப்பற்றுதல்
3. கருதுகை　　4. தொடக்கம்

399. "விஞ்ஞானம்" என்னும் சொல்லிலுள்ள "வி" என்னும் முன்னொட்டு உணர்த்தும் பொருள்

1. இன்மை　　2. விசேடம்　　3. உயர்வு　　4. இழிவு

400. "நகைத்தல்" என்னும் சொல்லின் அடி

1. நம்பு　　2. நாம்　　3. நகை　　4. நன்மை

401. பின்வருவனவற்றுள் பெண்பாலை மாத்திரம் உணர்த்துவது

1. புத்திசாலி　　2. பரிகாரி　　3. செவிலி　　4. தொழிலாளி

402. உரிச்சொல் என்பதன் பொருள்

1. செய்யுளுக்கு உரிய சொல்
2. பொருளுக்கு உரிமை பூண்ட சொல்
3. பொருளுக்கு உரிய பண்பை உணர்த்தும் சொல்
4. தமிழுக்கு உரிய சொல்

403. பகுபதத்திலே உரிச்சொல்

1. பகுதியாய் நிற்கும்　　2. விகுதியாய் நிற்கும்
3. இடைநிலையாய் நிற்கும்　　4. சாரிகையாய் நிற்கும்

404. "நள்ளிருள்" என்பதில் வந்துள்ள உரிச்சொல்

1. நடு　　2. நள்　　3. நனி　　4. நளி

405. "கழறுதல்" என்னும் சொல்லின் நுட்பப் பொருள்

1. உரத்துச் சொல்லுதல்　　2. மறுமொழி சொல்லுதல்
3. கடிந்து சொல்லுதல்　　4. விலை சொல்லுதல்

406. "கருணைகூர் முகங்களாறும்" உன்னுந் தொடரில் வரும் "கூர்" என்ற உரிச்சொல் உணர்த்தும் பொருள்

1. கூர்மை　　2. மிகுதி　　3. விளக்கம்　　4. வளம்

407. "கடியுடை வியனகர்" என்னுந் தொடரிலே, கடி என்னும் உரிச்சொல் உணர்த்தும் பொருள்

1. காவல்　　2. வாசனை　　3. கவியாணம்　　4. அச்சம்

408. "பாசி" என்பது பிறப்பதற்கு அடியாயமைந்த உரிச்சொல்

1. பச்சை 2. பசு 3. பசலை 4. பசுமை

409. பின்வருவனவற்றுள் "வா" என்னும் அடியாகப் பிறந்த பெயர்

1. வாவல் 2. வாயில் 3. வாரானை 4. வாடை

410. "மல்லல் மால் வரை" என்னுந் தொடரில் மல்லல் என்பது உணர்த்தும் பொருள்

1. பெருமை 2. வளப்பம் 3. உயர்ச்சி 4. வாசனை

411. "அன்புக்கு முன்டோ அடைக்குந் தாழ்" என்னுந் தொடரில் ஓகார இடைச்சொல்லின் பொருள்

1. ஒழியிசை
2. எதிர்மறை
3. உயர்வுசிறப்பு
4. தெரிநிலை

412. "எந்நன்றி கொன்றார்க்கு முய்வுண்டாம்" என்னுந் தொடரில் 'உம்' இடைச்சொல்லின் பொருள்

1. எண் 2. முற்று 3. ஐயம் 4. இழிவுசிறப்பு

413. பின்வருவனவற்றுள் "உம்" இடைச்சொல் எதிர்மறைப் பொருளைத் தருந் தொடர்

1. "நெடுங்கடலுந் தன்னீர்மை குன்றும்"
2. "எல்லார்க்கும் நன்றாம் பணிதல்"
3. "நன்றே தரினும் நடுவிகந்தாம் ஆக்கத்தை அன்றே கழியவிடல்"
4. அன்பிற்கு முண்டோ அடைக்குந் தாழ்"

414. பின்வருவனவற்றுள் விரைவுக்குறிப்பு உணர்த்தும் தொடர்

1. திடுதிடென 2. திடீலென 3. திட்கென 4. திடுக்கென

415. "நான்" என்பது

1. முன்னிலைப்பெயர்
2. தன்மைப்பெயர்
3. தன்மை ஒருமைப்பெயர்
4. தன்மை பன்மைப்பெயர்

416. "நீ வந்தாய்" என்பது

1. படர்க்கைப்பெயர்
2. தன்மை பன்மைப்பெயர்
3. பன்மைப்பெயர்
4. முன்னிலை ஒருமைப்பெயர்

417. "நீ நேற்றுப் பாடசாலைக்கு வந்தாய்" என்பதில் "நீ" என்பது
1. முன்னிலைப்பெயர் 2. ஒருமைப்பெயர்
3. பன்மைப்பெயர் 4. தன்மைப்பெயர்

418. "அவள் ஒரு கவிதை எழுதினாள்" என்பதில் "அவள்" என்பது
1. தன்மை ஒருமைப்பெயர் 2. ஒருமைப்பெயர்
3. பன்மைப்பெயர் 4. படர்க்கைப் பெயர்

419. பின்வருவனவற்றுள் உடன்பாட்டு வினைமுற்று அல்லாதது எது?
1. எழுதுகிறான் 2. செல் 3. வராது 4. வந்தேன்

420. **Hard ware** என்பதன் தமிழ்க் கலைச்சொல்
1. மென்பொருள் 2. வன்பொருள் 3. குறிப்புகள் 4. நினைவகம்

421. பின்வருவனவற்றுள் கிழக்குப் பிரதேச மொழி
1. வித்துப் போட்டாள் 2. போவாங்க
3. உறுலோசு 4. பொழப்பு

422. 'மறுகா' என்பது
1. மறுபடியும் 2. பின்பு 3. மீண்டும் 4. மறுப்பு

423. 'உப்பட்டி' என்பது
1. கிழக்கு பிரதேசம் 2. வடக்கு பிரதேசம்
3. விவசாய சமூகம் 4. மீனவ சமூகம்

424. 'செட்டுப்பிடிச்சவன்' என்பது
1. செட்டை பிடித்தல் 2. செருக்காயிருத்தல்
3. பெருமைக்குரியவன் 4. அதிகாரம் மிக்கவன்

425. 'கொண்டல்' காற்று
1. கிழக்குத் திசையிலிருந்து 2. வடக்கிலிந்து
3. மேற்கிலிருந்து 4. தெற்கிலிருந்து

426. அவன் நடந்து வந்தான்
1. தனி வாக்கியம் 2. தொடர் வாக்கியம்
3. கூட்டு வாக்கியம் 4. எழுவாய்த்தொடர்

427. இலக்கியக் கட்டுரையில் இல்லாதது;

1. உணர்வு
2. இலக்கிய நாடகம்
3. இலக்கியச் செழுமை
4. அறிவியல்

428. 'குண்டுச் சத்தம் கேட்டு மக்கள் அல்லோலகல்லோலப்பட்டனர்'. இங்கு அல்லோலகல்லோலம் என்பது

1. பதட்டம்
2. அவசரம்
3. பயம்
4. கலக்கம்

429. பந்தியை விரித்து விளக்கப் பயன்படாதது:-

1. நியாயம் கூறுதல்
2. சுருக்கச் சொல்லுதல்
3. உதாரணம் கூறுதல்
4. காரணகாரியத் தொடர்பு கூறுதல்

430. கட்டுரையில் தவிர்க்கப்படாதது அல்லாதது

1. பந்தி அமைப்பு
2. பொருத்தமான குறியீடு
3. முரண்படக் கூறுதல்
4. வாசகரைக் கவர்தல்

431. "தை பிறந்தது" என்பது

1. 1ம் வேற்றுமை
2. 2ம் வேற்றுமை
3. 5ம் வேற்றுமை
4. 7ம் வேற்றுமை

432. வினைத்தொகை அல்லாதது

1. கருங்குழல்
2. உரைகல்
3. மலர்தாமரை
4. குளிர்பனி

433. இளமை என்பதில் "மை" விகுதி உணர்த்துவது

1. இளநிலை
2. இடைநிலை
3. பண்பு விகுதி
4. தொழில் பெயர் விகுதி

434. 'ஈவிரக்கம் இல்லாது தண்டனை கொடுத்தாள்'. இங்கு 'ஈவிரக்கம்' என்பது

1. கருணை
2. கொடுக்கல் வாங்கல்
3. ஈவுசோர்வு
4. பாசம்

435. "நாவல் மரம்" என்பது

1. பண்புத்தொகை
2. இருபெயரொட்டுபண்புத்தொகை
3. உவமைத்தொகை
4. வேற்றுமைத்தொகை

436. உவமை அணி அல்லாதது
1. மான் போன்ற விழி　　2. முத்துப் போன்ற பல்
3. மை விழி　　4. கரிய கூந்தல்

437. அன்மொழித் தொகை என்பதைப் பிரித்தால்
1. அன் + மொழி + தொகை　　2. அன்மொழி + தொகை
3. அல் + மொழி + தொகை　　4. அன்மொழி + தொகை

438. "பூங்குழல் வந்தாள்" என்பது
1. வினைத்தொகை
2. அன்மொழித்தொகை
3. வேற்றுமைத்தொகை
4. வினைத்தொகைப்புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை

439. "நான் கண்ட கனவு" என்பது
1. தற்சார்புக் கட்டுரை　　2. சுயசரிதை
3. விளக்கக் கட்டுரை　　4. கற்பனைக் கட்டுரை

440. "பிள்ளை" எனும் இளமைப் பெயரைக் குறிக்காத பெயர்
1. தவளை　　2. கீரி　　3. கிளி　　4. அணில்

441. "கடிகாவல்" என்பது
1. உரிச்சொற்றொடர்　　2. இடைச்சொற்றொடர்
3. வினையெச்சத்தொடர்　　4. பெயரெச்சத்தொடர்

442. சிலை, தநு, சாபம் என்பவற்றைக் குறிக்கும் ஒரு சொல்
1. சபித்தல்　　2. அம்பு　　3. வில்　　4. சிற்பம்

443. தாலம் என்பது
1. தாழ்ப்பாள்　　2. பனை　　3. பூட்டு　　4. தாளம்

444. தாலாட்டு என்பது பிரிக்கப்படும்போது
1. தால் + அட்டு　　2. தாலம் + அட்டு
3. தால் + ஆட்டு　　4. தால் + அம் + அட்டு

445. "பதி" என்பதைக் குறிக்கும் பல சொற்களின் கூட்டம் அல்லாதது
1. பதித்தல், அரசன், பொறித்தல்
2. அரசன், இடம், கணவன்
3. இறைவன், பொறித்தல், தமையன்
4. தலைவன், நாட்டல், நினைத்தல்

446. பெயர் அடைகள் பினவருவனவற்றுள் எக்கூட்டத்தில் காணப்படுகின்றன
1. நல்ல மனிதன் நச்சு மரத்தில் இருந்தான்
2. மூன்று முகத்து முக்கண்ணன்
3. அவ்வீட்டில் இப்பையன் இருந்தான்
4. எவன் ஒருவன் அங்கு இருந்தான்

447. பின்வருவனவற்றுள் சுவரொட்டியில் இடம்பெறுவதற்கு தகுதியற்றது
1. பெரிய எழுத்து 2. கவர்ச்சிகரமான அமைப்பு
3. விழிப்பு 4. நீண்ட வசனம்

448. 'இச்சை' என்பதன் எதிர்ச்சொல்
1. மச்சை 2. அநிச்சை 3. விருப்பம் 4. ஆசை

449. 'ஆதாரம்' என்பதை விளக்காத சொற்கூட்டம்
1. ஆதரவு, எடுத்துக்காட்டு 2. சான்று, சாட்சியம்
3. உதாரணம், ஆதரவு 4. தூண்டுதல், உதவி

450. 'திண்மை' என்பதன் எதிர்க்கருத்து
1. கடினம் 2. மென்மை 3. நொய்ம்மை 4. திணிவு

451. ஆக்கப்பெயர் அல்லாதது
1. பெயர் + விகுதி 2. பெயர் + விகுதி + விகுதி
3. வினை + விகுதி 4. வினை + வினை

452. 'பார் + ரதம்' என்பது
1. ஆக்கப்பெயர் 2. கூட்டுப்பெயர்
3. கூட்டுவினை 4. ஏவல்வினை

453. 'பெறுமதி' என்பது
1. கூட்டுவினை 2. ஆக்கப்பெயர்
3. கூட்டுப்பெயர் 4. வினைமுற்று

454. பிறருக்கு தீங்கு விளைவிக்க கூடிய சொற்களைப் பயன்படுத்தி கவி பாடுதல்
1. சிறப்புக்கவி
2. அறம்பாடுதல்
3. ஆசியுரைத்தல்
4. கவிபுனைதல்

455. அடிதோறும் சொற்களின் இரண்டாவது எழுத்து ஒன்றி வருதல்
1. எதுகை
2. மோனை
3. பின்வருநிலை
4. மடக்கு

456. தேவர்க்குச் சமர்ப்பிக்கும் உணவு
1. அமிர்தம் 2. அவிசு 3. தவிசு 4. படையல்

457. 'கொடுமதி' என்பதன் எதிர்க்கருத்து
1. வருமதி 2. பெறுமதி 3. கெடுமதி 4. முகமதி

458. 'பட்டோலை' என்பது
1. கல்லில் பொறிப்பது
2. ஏட்டில் எழுதுவது
3. நன்மை செய்தவர்க்கு வலது கரத்திலும் தீமை செய்தவர்க்கு இடது கரத்திலும் பதியும் பதிவேடு
4. மன்னனால் புகழ்ந்து கூறப்படுவது

459. கிளைஞர் என்பது
1. இளைஞர் 2. பகைவர் 3. உறவினர் 4. பிறர்

460. "திரிந்து பறந்து வா" என்பதன் ஏவல் வினை
1. திரிந்து 2. பறந்து 3. வா 4. பறந்து வா

461. "எண்ணித் துணிக" என்பதின் வினைமுற்று
1. வியங்கோள் வினைமுற்று
2. ஏவல் வினைமுற்று
3. தெரிநிலை வினைமுற்று
4. குறிப்பு வினைமுற்று

462. "பாயிரம்" என்பது
1. முன்னுரை 2. அணிந்துரை 3. மதிப்புரை 4. பதிப்புரை

463. "அந்தாலஜி" என்பதன் தமிழ் வடிவம்
1. உள்ளுணர்வு
2. பூந்துணர்
3. புத்தாயிரமாமாண்டு
4. பத்தாயிரமாமாண்டு

464. DECOMPOSERS என்பது

1. குருதிச்சோகை 2. பிரிகையாக்கி
3. தொடர்பாடல் 4. பின்விளைவு

465. பெயராகவும் வினையாகவும் அமையும் சொல்

1. கடி 2. உரி 3. பிணை 4. மாறு

466. அகப்புணர்ச்சிக்கு உதாரணம் அல்லாதது

1. கலை + அகம் + அத்து
2. மரம் + வேர்
3. எல்லோரும் + இன்புற்றார்கள்
4. சா + த் + த் + அன்

467. சுட்டெழுத்தை அடுத்து வரும் வல்லினம்

1. மிகும் 2. குறையும்
3. மாற்றம் இல்லை 4. புணரும்

468. 'அட்சரம்' என்பதன் எதிர்ப்பொருள்

1. சரம் 2. சரட்சரம் 3. நிரட்சரம் 4. துரட்சரம்

469. 'தாலம்' என்பதைக் குறிக்காதது

1. பனை 2. தாளம் 3. நாக்கு 4. பூமி

470. கூட்டுப்பெயர்களாக அமைக்கப்பட முடியாதது

1. பெயர் + பெயர் 2. வினை + பெயர்
3. வாள் + ஒலி 4. முயல் + சி

471. வினை + விகுதியாக அமையும் ஆக்கப்பெயர்

1. முதல் + ஆளி 2. முதல் + ஈடு
3. உயர் + அம் 4. வடை + காரி

472. கோட்டைக்கு வெளியே அமைந்துள்ள அகழிக்கு வெளியே அரணாய் அமைந்த காடு

1. ஆரணம் 2. வனம் 3. காவற்காடு 4. காவற்பகுதி

473. உலக இன்பங்களை மட்டுமே உண்மை என நம்புகின்றவன்

1. உலோகாயுதன் 2. இரட்சகன்
3. ஞானி 4. அரசியல்வாதி

474. "எழுமையும் தொடரும் உழுவலன்பு" என்பது
1. தொடரும் அன்பு 2. நீங்கா அன்பு
3. ஏழுபிறப்பும் தொடரும் பேரன்பு 4. கட்டாயப்படுத்தும் அன்பு

475. 'போனது' என்பதைப் பிரித்தால்
1. போ + அது 2. போ + ன் + அது
3. போ + ன் + து 4. போ + னாது

476. 'வந்தாள்' என்பதன் பகுதி
1. வந்து 2. வா 3. வந்த 4. வரும்

477. "மரம் போல்வர் மக்கட்பண்பில்லாதவர்" என்பதன் எழுவாய்
1. மரம் 2. மக்கள்
3. மக்கள்பண்பு இல்லாதவர் 4. மக்கள் பண்பு

478. 'சகாப்தம்' என்பது
1. நூறாண்டு 2. பத்தாண்டு
3. புத்தாயிரமாமாண்டு 4. பத்தாயிரமாமாண்டு

479. எட்டுத்தொகை பத்துப்பாட்டு இடம்பெற்ற காலம்
1. சங்ககாலம் 2. சங்கமருவிய காலம்
3. சோழர் காலம் 4. பல்லவர் காலம்

480. "படிக்கமாட்டாள்" என்பதின் இடைநிலை எது?
1. படி 2. மாட்டு 3. ஆள் 4. மாட்டாள்

481. தாழையின் உள்ளீடு
1. சளியம் 2. விதை 3. சோறு 4. கறி

482. GLOBALIGATION என்பது
1. பூகோளமயமாக்கல் 2. தொடர்டபாடல்
3. வலைப்பின்னல் 4. உலகம் சார்ந்த

483. ஆரணம், வாரணம் பூரணம், நாரணம் என்பவை எவ்வகை சொற்கள்?
1. சிலேடை 2. மோனை 3. தற்குறிப்பு 4. மடக்கு

484. வியங்கோள் வாக்கிய வகை அல்லாதது

1. வாழ்த்துதல் 2. வைதல் 3. அருளுதல் 4. கூறுதல்

485. "வழிப்படுத்தல்" என்பது

1. ஆற்றுப்படுத்துதல்
2. வழிசொல்லுதல்
3. வழிகாட்டுதல்
4. முகமன் கூறுதல்

486. உறங்கி - உறங்கி என்பது

1. அடுக்குமொழி
2. இணைமொழி
3. இரட்டைமொழி
4. அடுக்கிடுக்குமொழி

487. எதிர்காலப் பெயரெச்ச விகுதி

1. அ 2. உ 3. உம் 4. சி

488. செயற்பாட்டுவினை வடிவம்

1. செயல் + விகுதி
2. செயல் + இடைநிலை + விகுதி
3. எச்சம் + காலஇடைநிலை + விகுதி
4. வினையெச்சம் + பகுதி + காலஇடைநிலை + திணைபால்விகுதி

489. முதற்போலியாக அமைவது

1. அய்யர் 2. ஐந்து 3. குன்றில் 4. புறநகர்

490. "தேதி" என்பது

1. இலக்கணமுடையது
2. மரூஉ
3. தகுதி
4. இடக்கரடக்கல்

491. "அருமந்த" என்பது இலக்கணவழக்கில்

1. அரிமந்த
2. அருமருந்தன்ன
3. அருமையான
4. மந்தகதி

492. தற்கால வழக்கில் புறப்புணர்ச்சியில் ஈற்றுமெய்

1. இரட்டிக்கும்
2. இரட்டிக்காது
3. ஈற்றுமெய் கெடும்
4. மெய் தோன்றும்

493. அரி - மிருகேந்திரன் - கேசரி என்பன குறிக்கும் சொல்
1. சிலை 2. மிருகம் 3. சிங்கம் 4. வெட்டு

494. அட்டவணை என்பது
1. மராத்தி 2. கன்னடம் 3. பாளி 4. உருது

495. 'அறிக்கை' என்பதில் இடம்பெறத் தகுதியற்றது
1. நேரம் 2. இடம் 3. காலம் 4. வர்ணணை

496. செயப்பாட்டுவினை வாக்கியத்தில் மறைந்துள்ள வேற்றுமை உருபு
1. 2ம் வேற்றுமை 2. 3ம் வேற்றுமை
3. 5ம் வேற்றுமை 4. 7ம் வேற்றுமை

497. "சொற்செட்டு" என்பது
1. சுருங்கிய சொல்லில் விளக்குதல்
2. சுருக்குதல்
3. சுருங்கச்சொல்லி விளக்குதல்
4. விடயத்தெளிவு

498. தொகைநிலை என்பது
1. தொகுத்து கூறுதல் 2. பொருள் தொக்கு நிற்றல்
3. உருபு தொக்கு நிற்றல் 4. அதிகமாக கூறுதல்

499. **பரிமாணம் - பரிணாமம்** என்பது முறையே
1. வெட்கம் - வேதனை 2. அளவு - கூர்ப்பு
3. அளவு - வளர்ச்சி 4. அளவு - அழிவு

500. "இவனே நல்லன்" என்பதில் 'ஏகாரம்' குறிப்பது
1. தேற்றம் 2. எதிர்மறை 3. எண் 4. பிரிநிலை

501. பெயர் எச்சம் + அவன் + வேற்றுமை உருபு சேர்ந்தால்
1. பெயர்ச்சொற்றொடர் 2. வினையாலணையும்பெயர்
3. வினைத்தொடர் 4. பெயரெச்சத்தொடர்

502. "திண்டேர்வளவன்" என்பதைப் பிரித்தால்
1. திண் + டேர் + வளவன் 2. திண் + தேர் + வளவன்
3. திண்டேர் + வளவன் 4. திண்டு + தேர் + வளவன்

503. "கொறடா" என்பது

1. போர்த்துக்கீச மொழி
2. ஒல்லாந்துமொழி
3. பிரெஞ்சு மொழி
4. ஆங்கில மொழி

504. "அவளோடு அழிந்தது" என்பதன் சொல்லுருபு

1. ஓடு
2. ஒடு
3. உடன்
4. உடைமை

505. ஒறுப்பு என்பதன் எதிர்ப்பொருள்

1. லாபம்
2. அதிகம்
3. மலிவு
4. உறுப்பு

506. "வருத்து - குதிரையின் பிடரி மயிர் - அழுகை" என்பவற்றைக் குறிப்பது

1. உழை
2. இளை
3. உளை
4. இழை

507. "அர்த்தபுஸ்டியுள்ள" என்பதன் தமிழ் வடிவம்

1. கருத்துள்ள
2. பொருள்செறிந்த
3. கருத்தற்ற
4. காரணம் தெரிந்த

508. "கரத்தை" என்பது

1. போர்த்துக்கீசம்
2. ஒல்லாந்து
3. ஜேர்மனி
4. பிரித்தானியா

509. வினைச்சொல்லின் இயல்பு அல்லாதது

1. செயலைக் குறிக்கும்
2. காலத்தைக் காட்டும்
3. திணையைக் காட்டும்
4. பெயரைக் குறிக்கும்

510. "குறிப்பறிய மாட்டாதவன் நன்மரம்" என்பதன் பயனிலை

1. குறிப்பு
2. குறிப்பறிதல்
3. நன்மரம்
4. குறிப்பறிய மாட்டாதவன்

511. ககனப்பறவை நீட்டும் அலகு என்பதில் "ககனப்பறவை"

1. உவமையணி
2. உருவக அணி
3. சிலேடை அணி
4. தற்குறிப்பேற்றம்

512. "வெட்டி எறிந்த நகம் போல விளங்கும் மூன்றாம் பிறை" என்பதில் உவமானம்

1. வெட்டி எறிதல்
2. வெட்டி எறிந்த நகம்
3. மூன்றாம் பிறை
4. விளக்கு

513. நூலாசிரியர் தன் நூலுக்கு அந்நூல் பற்றி தானே எழுதுவது
1. நூன்முகம் 2. அணிந்துரை 3. புகழுரை 4. ஆசியுரை

514. நூலின் சிறப்புப்பற்றி நூலாசிரியர் அல்லாது வேறொருவர் சிறப்பித்து எழுதுவது
1. சிறப்புரை 2. முகவுரை 3. அகவுரை 4. அறிமுகம்

515. "நூலாசிரியர் தன் நூலுக்கு தான் எழுதாததைக் குறிப்பது"
1. முன்னுரை 2. நூன்முகம் 3. அகவுரை 4. அணிந்துரை

516. நூலைப் பதிப்பித்தவர் எழுதுவது
1. அணிந்துரை 2. மதிப்புரை 3. பதிப்புரை 4. அறிவுரை

517. "சரவை" என்பது
1. பிற்சேர்க்கை
2. எழுத்துப் பிழைகள் உள்ள பிரதி
3. பயனற்றது
4. அறிமுகம்

518. "அனுபந்தம்" என்பது
1. தொடக்கம் 2. தொடர்ச்சி 3. முடிவு 4. சேர்க்கை

519. பதவுரை என்பது
1. பொருள் உரைத்தல்
2. சொல்லுக்கு சொல் பொருள் உரைத்தல்
3. சுருக்கமாகக் கூறுதல்
4. விரிவாகக் கூறுதல்

520. அந்தாதி என்பது
1. ஆதியில் இருந்து அந்தம் வரை
2. முடிவில்லாதது
3. அந்தத்தில் ஆரம்பித்தல்
4. தொடக்கம் இல்லாதது

521. "பாதீடு" என்பது
1. வரவுசெலவுத் திட்டம் 2. ஆண்டறிக்கை
3. கூட்டறிக்கை 4. சுற்றறிக்கை

522. பேச்சு மொழியில் சொற்களுக்கு அடிப்படையான மூலஒலி

1. எழுத்து 2. சத்தம் 3. உருபன் 4. ஒலியன்

523. "செத்தான்" என்பதன் வினையடி

1. சா 2. செத்து 3. செத்த 4. செத்தவன்

524. கூட்டு வினையாக அமையமாட்டாதது

1. பாடம்படி 2. அடித்துக்கட்டு
3. முன்னேறு 4. வானொலி

525. "வங்கினைப் பற்றி போகா வல்லுடும்பு என்பதில் "வங்கு"

1. பொந்து 2. வங்கி 3. உடும்பு 4. மரம்

526. "சருக்கம்" என்பது

1. பகுதி 2. தொடர்ச்சி
3. இலக்கியச் செய்யுட் பகுதி 4. முடிவு

527. மா, பூ, கா ,பா, நா என்பன முறையே குறிப்பது

1. மரம், காகம், பாட்டு, நாகம், மலர்
2. குதிரை, மலர், காடு, செய்யுள், நாக்கு
3. மாமரம், பூமரம், கதிர், யானை, பாக்கு
4. மான், செடி, காடு, பாட்டு, நாடு

528. "பெருங்காப்பிய இலக்கணம்" என்றால்

1. பெரிதாக இருப்பது
2. தொடராக இருப்பது
3. அறம் - பொருள் - இன்பம் - வீடு ஆகிய நான்கும் இணைந்து இருப்பது
4. சுவை - உணர்ச்சி - பொருள் - அணி என்பன காணப்படல்

529. மஞ்சு - அஞ்சு - பஞ்சு - இஞ்சு என்பன முறையே

1. மேகம் - பயம் - மென்மை - வெல்லம்
2. இருள் - பயம் - குருவி - மென்மை
3. மேகம் - ஐந்து - பஞ்சம் - குடிநந்தை
4. முகில் - பயன் - ஐந்து - குடுமி

530. "வெந்தயத்தால்" என்பதைப் பிரித்தால்

1. வெந்தயம் + அத்து + ஆல்
2. வெந்தயத்து + ஆல்

3. வெந்த + அயத்து + ஆல்
4. வெந்த + அயத்தால்

531. "மச்சுவீடு" என்றால்
1. குடிசை 2. மாளிகை 3. மாடிவீடு 4. கீடுகுவீடு

532. "நச்சுப் பாம்பு" என்பது
1. போல 2. மங்கலம் 3. அமங்கலம் 4. மருஉ

533. "செய்யுள்களின் உள்ளுறைப் பொருளைக் கண்டு நயத்தல் வேண்டும்" - 'உள்ளுறை' என்றால்
1. நேர்ப்பொருள் 2. சொற்பொருள்
3. குறிப்புப்பொருள் 4. விளக்கப்பொருள்

534. "கண்ணுக் கணிகலம் கண்ணோட்டம்" "கண்ணோட்டம்" என்பதன் ஒத்த கருத்துச்சொல்
1. இரக்கம் 2. கடைகண்பார்வை
3. ஆராய்தல் 4. கண்ணாடி

535. "அலக்கண் அடைந்தோர் பலர் இந்தியாவுக்க இடம் பெயர்ந்தனர்" 'அலக்கண்' என்றால்
1. மலர்ந்த கண் 2. செல்வம்
3. துன்பம் 4. வறுமை

536. கைதிகளைப் பலவந்தப்படுத்தி வேலை செய்வித்தனர் - "பலவந்தம்" என்பதன் எதிர்க் கருத்துச் சொல்
1. இன்பம் 2. சுயேச்சை
3. தண்டனை 4. கொடுமை

537. "மந்தமாருதத்தை அனுபவித்து மகிழ்ந்தனர்" - 'மந்தமாருதம்' என்பதன் எதிர்க் கருத்துச்சொல்
1. இன்பம் 2. சுயேச்சை
3. வாடைக்காற்று 4. புயற்காற்று

538. "பொருளாழமும் பொருட்சிறப்பும் சுவையும் இல்லாத பாட்டு"
1. வெள்ளைக்கவி 2. செஞ்சொற்கவி
3. சந்தக்கவி 4. வறண்டகவி

539. "கால் + நகம்" என்பதைப் புணர்த்தினால்
1. கால்நகம் 2. கானகம் 3. கான்நகம் 4. கான்னகம்

540. "முள் + செடி" என்பதைப் புணர்த்தினால்
1. முள்ச்செடி 2. முள்செடி 3. முட்செடி 4. முள்ளுஞ்செடி

541. "மகா + ஈசன்" என்பதைப் புணர்த்தினால்
1. மகாவீசன் 2. மகவீசன் 3. மகாஈசன் 4. மகேசன்

542. "அருள் + நெறி" என்பதைப் புணர்த்தினால்
1. அருநெறி 2. அருண்நெறி
3. அருணெறி 4. அருள்நெறி

543. பின்வருவனவற்றில் பொதுமொழியாய் அமைந்த சொல்
1. இராப்பகல் 2. பறக்கும் 3. அரிவாள் 4. தங்கை

544. பின்வருவனவற்றில் 'முன்னிலை' இடத்தைக் குறிக்கும் சொல் அல்லாதது
1. நடந்தாய் 2. படுப்போம் 3. ஆடுவீர் 4. வருவாய்

545. பின்வருவனவற்றில் வந்த இலக்கணப்போலி அல்லாதது
1. வாய்க்கால் 2. முன்றில் 3. நுனிநா 4. தேன்கூடு

546. உரிச்சொல் பற்றிய கூற்றக்களிற் பொருத்தமற்றது
1. பெயர், வினைச்சொற்கள் தோன்றுவதற்குப் பகுதியாய் வரம்
2. குணப்பண்பையும் தொழிற்பண்பையும் உணர்த்தும்
3. வேற்றுமை ஏற்கும்
4. பெரும்பாலும் செய்யுளில் வரும்

547. பின்வருவனவற்றில் மரூஉ சொல் அல்லாதது
1. புட்குலங்கள் 2. வாணாள் 3. சோணாடு 4. அருமந்த

548. காரணப்பெயர் அல்லாத சொல்
1. அணி 2. வான் 3. தொடை 4. கரைசல்

549. முன்னிலைப் பெயர் அல்லாதது
1. யாம் 2. நீர் 3. நீவிர் 4. எல்லீர்

550. அந்தக்குழந்தை செவிலித்தாயிடம் அன்பாய் இருந்தது - செவிலித்தாய் என்பதன் எதிர்க் கருத்துச்சொல்

1. பெற்றதாய் 2. பெரியதாய்
3. வளர்ப்புத்தாய் 4. சிறியதாய்

551. சுருங்கிய சொல்லால் பொருளாழம் மிக்கதாய் திட்பநுட்பத்தோடு கூறும் செய்யுள் வகை

1. வெண்பா 2. சூத்திரம் 3. குறள் 4. ஆத்திசூடி

552. "பென்னம்பெரிய" என்பது

1. இரட்டைமொழி 2. இணைமொழி
3. அடுக்குமொழி 4. அடுக்கிடுக்குமொழி

553. பின்வருவனவற்றில் வந்த "இரட்டைமொழி"

1. மெல்ல மெல்ல 2. கலகல
3. வெள்ளைவெளேர் 4. மூலைமுடுக்கு

554. பின்வருவனவற்றில் வந்த "இணைமொழித்தொடர்"

1. நெறுநெறு 2. விழலுக்கிறைத்தல்
3. வெள்ளைவெளேர் 4. சீருஞ்சிறப்பும்

555. பின்வருவனவற்றில் வந்த "அடுக்குத்தொடர்"

1. கடகட 2. சிறியசிறிய
3. சின்னஞ்சிறிய 4. சந்துபொந்து

556. "க" என்னும் வரிவடிவம் ஒன்றாயிரக்க ஒலிப்பு முறையால் வேறுபடுஞ்சொல்

1. கடல் 2. காகம் 3. பக்கம் 4. கதிர்

557. பெண்களிலே சீதை இலட்சணமான பெண் - இலட்சணம் என்பதன் ஒத்தகருத்துச்சொல்

1. இலக்கணம் 2. எழில் 3. கற்பு 4. தோற்றம்

558. குற்றியலுகரம் அல்லாத உகரம் இறுதியில் வந்த சொல்

1. நாடு 2. வயிறு 3. கதவு 4. பாம்பு

559. "கண்மணி" என்பது என்ன வேற்றமைத்தொகை?

1. 1ம் வேற்றுமை
2. 5ம் வேற்றுமை
3. 7ம் வேற்றுமை
4. 2ம் வேற்றமை

560. "கண்மணி வந்தாள்" எத்தனையாம் வேற்றுமை?

1. 1ம் வேற்றுமை
2. 2ம் வேற்றுமை
3. 3ம் வேற்றுமை
4. 4ம் வேற்றுமை

561. "வரமாட்டாள்" என்பதைப் பகுபத உறுப்பாகப் பிரிக்கும் போது?

1. வா + மாட்டு + ஆள்
2. வர + மாட்டு + ஆள்
3. வரமாட்டு + ஆள்
4. வா + மா + ஆட்டு + ஆள்

562. "மாரன்" என்பதைக் குறிப்பது

1. கள்ளன் 2. கண்ணன் 3. இராமன் 4. மன்மதன்

563. "மாறன்" என்பதைக் குறிப்பது

1. சோழன் 2. சேரன் 3. பாண்டியன் 4. பல்லவன்

564. "பா" என்பதைக் குறிக்காதது

1. பாடுதல்
2. பாடல்
3. நெசவுக் கூழ்
4. பஞ்சு நூல்

565. "தே" என்பதை குறிப்பது

1. தேனீர் 2. தேனீ 3. தெய்வம் 4. விகுதி

566. "நா" என்பதைக் குறிக்காதது:

1. நாக்கு 2. தராசு 3. பூட்டு 4. நான்

567. "SUPER MARKET" என்பதன் தமிழ் வடிவம்?

1. சிறப்பங்காடி
2. அழகிய சாலை
3. புதிய சந்தை
4. திறமையான சந்தை

568. கால்வாய் என்பதை "வாய்க்கால்" என்று மாற்றும் போது

1. இலக்கணமுடையது
2. இலக்கணப்போலி
3. மருஉ
4. குருதி

569. பெயர்ச்சொல் வினையடியாக வருதல்

1. யாசித்தாள் 2. ஓடினாள் 3. பாடினாள் 4. பறந்தது

570. வடமொழியும் தமிழ்மொழியும் கலந்த மொழிநடை

1. செந்தமிழ் நடை
2. கலப்பு மொழிநடை
3. மணிப்பிரவாள நடை
4. வெள்ளை

571. "PASSPORT" என்பதன் தமிழ் வடிவம்

1. கடவுச் சீட்டு
2. நுழைவுச் சீட்டு
3. அனுமதிச் சீட்டு
4. பயணச் சீட்ட

572. "VIBRATOR" என்பதன் தமிழ் வடிவம்

1. அதிரி
2. குறுஞ்செய்தி
3. மெல்லொலி
4. ஒலி

573. விகாரம் கொண்ட சொல் எது?

1. வந்தனன் 2. படித்தான் 3. சிரித்தான் 4. ஓடினான்

574. சொற்களின் பொருளைச் செய்யுள் வடிவில் திரட்டித் தரும் நூல்

1. அகராதி
2. கலைக் களஞ்சியம்
3. நெடுங்கணக்கு
4. நிகண்டு

575. பிச்சை, சந்தேகம் என்ற இரண்டு கருத்துக்களையும் உணர்த்தும் சொல்

1. ஐயம் 2. தானம் 3. தருமம் 4. பசி

576. உத்தேச அரசியலமைப்பு ......................... பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

1. சட்டம் 2. ஒப்புதல் 3. மசோதா 4. வாக்கெடுப்பு

577. சிறுவர் உரிமைகள் பாதுகாக்கப்படும் என அரசியல் யாப்பில் ................................ அளிக்கப்பட்டுள்ளது

1. உத்தேசம்
2. உத்தரவாதம்
3. பிரசித்தம்
4. நிபந்தனை

578. உயிர் நெட்டெழுத்தின் மாத்திரை

1. இரண்டு 2. ஒன்று 3. அரை 4. மூன்று

579. "ஒப்புப் பொருளை" உணர்த்தும் இடைச்சொல் அல்லாதது

1. ஒப்ப 2. நிகர 3. அற்று 4. மான

580. பின்வருவனவற்றுள் உருதுமொழிச் சொல்

1. விருது 2. வக்கீல் 3. ஏலம் 4. பட்டாளம்

581. ஆசிரியர்கள் ஒவ்வொருவரும்
1. தத்தம் வீட்டுக்குச் சென்றனர்
2. தம் வீட்டுக்குச் சென்றனர்
3. தங்கள் வீட்டுக்குச் சென்றனர்
4. தமது வீட்டுக்குச் சென்றனர்

582. அந்த மரத்தில் காணப்படுகின்ற
1. ஒவ்வொரு பழங்களும் இனிமையானவை
2. ஒவ்வொரு பழங்களும் இனிமையானது
3. ஒவ்வொரு பழமும் இனிமையானவை
4. ஒவ்வொரு பழமும் இனிமையானது

583. எப்படித்தான் தடுத்தாலும் தீயோர் தாம் நினைத்ததைச்
1. செய்யாமல் விடுவார் 2. செய்யாமல் விட்டார்
3. செய்யாமல் விடுகிறார் 4. செய்யாமல் விடார்

584. எதிர்கால நிகழ்ச்சிகளை அறியும் ஆற்றல் படைத்தவன் ............................ எனப்படுவான்
1. தீர்க்கதரிசி 2. சோதிடன் 3. ஞானி 4. முனிவன்

585. போரில் இறந்த வீரனின் பெயரையும் புகழையும் எழுதி நாட்டப்படுவது ............................... எனப்படும்
1. நடுகல் 2. மைற்கல் 3. காவற்கல் 4. வாயிற்கல்

586. இருபொருள்படத் தொடுப்பது
1. அங்கதம் 2. சிலேடை
3. வஞ்சப்புகழ்ச்சி 4. இரட்டுற மொழிதல்

587. கண்ணன் பாட ராதை ஆடினாள். இங்கு வந்த "பாட" என்பது
1. குறிப்பு வினையெச்சம்
2. தெரிநிலை வினையெச்சம்
3. குறிப்பு வினைமுற்று
4. தெரிநிலை வினைமுற்று

588. "வேற்கண்ணாள் வந்தாள்" இங்கு வந்த "வேற்கண்" என்பது
1. வினைத்தொகை 2. வேற்றுமைத்தொகை
3. உவமைத்தொகை 4. அன்மொழித்தொகை

589. "அருமந்த பழத்தை அணில் கொறித்து விட்டது" இங்கு வந்த "ஆரமந்த" என்பது

1. மரூஉ 2. மங்கலம் 3. குழூஉக்குறி 4. இடக்கரடக்கல்

590. "பேஜர்" (PAGER) என்பதன் தமிழ் வடிவம்

1. பளிங்கு 2. அகவம் 3. ஒலிபரப்பு 4. மின்குமிழ்

591. உலக நாடுகளில் இலங்கையில் தைக்கப்பட்ட ஆடைகளுக்கு நல்ல டிமான்ட் (Demand) உள்ளது. 'டிமான்ட்' என்பதற்கு வழங்கப்படும் தமிழ்க் கலைச்சொல்

1. பெறுமதி 2. ஆர்வம் 3. விண்ணப்பம் 4. கேள்வி

592. "கழுத்து, ஆபத்து, நிலப்பொரும் பிரிவு" எனும் பொருள்களைக் குறிக்கும் ஒரு சொல்

1. தாலம் 2. கண்டம் 3. பார் 4. வளை

593. நாம் கூறியவற்றையே,

1. அவர் கூறுவர் 2. அவரும் கூறினார்
3. அவர்களும் கூறுவர் 4. அவர்கள் சொன்னார்

594. தக்க காரணங் காட்டினாலன்றி நீர் கடமையினின்றும்

1. நீங்குவீர் 2. நீக்கப்படுவீர்
3. நீக்கப்படமாட்டாய் 4. நீக்கப்படுகின்றீர்

595. அம்மா தொட்டிலை ஆட்டினாள். "ஆட்டினாள்" என்பது

1. தன்வினை 2. பிறவினை
3. செய்வினை 4. செயப்பாட்டு வினை

596. இங்கே வந்தவனைக் காணவில்லை. "வந்தவனை" என்பது

1. எச்ச வினை 2. முற்று வினை
3. வினையாலணையும் பெயர் 4. கூட்டு வினை

597. பின்வருவனவற்றுள் எழுவாய் தொக்கு நிற்கும் வாக்கியம்,

1. பணம் பாதாளம் மட்டும் பாயும்
2. அழுத பிள்ளை பால் குடிக்கும்
3. துணை போனாலும் பிணை போகாதே
4. வேலிக்கு வைத்த முள் காலில் தைத்தது

598. "போங்கள்" என்பதன் எழுத்து வடிவம்

1. போவீர்கள் 2. செல்லுங்கள் 3. போகும் 4. போனார்கள்

599. "சுந்தரம்" என்பது

1. அழகு 2. சுகம் 3. சோபனம் 4. மூத்தவன்

600. நீதிமன்றத்திற்குச் சமூகமளிக்கும்படி நீதிபதி சாட்சிக்கு ................................ விடுத்தார்

1. அழைப்பு 2. அழைப்பாணை
3. மறுப்பாணை 4. அறிக்கை

601. தனியார் தாபனங்கள் நட்டத்தில் இயங்குவதைத் தடுப்பதற்காக ஆணைக்குழு செய்த ................................ ஏற்றுக் கொள்ளப்பட்டது

1. ஆய்வுரை 2. மதிப்புரை 3. விதப்புரை 4. உறுதியுரை

602. "இல்லது இனியது நல்லதைப் புனைந்து கூறுதல்" .......................... எனப்படும்

1. புகழுரை 2. புனைந்துரை 3. அணிந்துரை 4. முன்னுரை

603. மெய் எழுத்து ஆய்தம் என்பவற்றுக்குரிய மாத்திரை

1. மூன்று 2. ஒன்று 3. அரை 4. கால்

604. "களிமகிழ்வெய்தினர்" என்பதில் வந்துள்ள களி என்பது

1. வினைச்சொல் 2. பெயர்ச்சொல்
3. இடைச்சொல் 4. உரிச்சொல்

605. பின்வருவனவற்றுள் வினா எழுத்து அல்லாதது

1. ஏ 2. ய 3. எ 4. யா

606. ................................ கறி நோய்க் கிருமிகளை அழிக்கவல்லது என்பர்.

1. பாவற்காய் 2. பாகற்காய் 3 . பாவர்காய் 4. பாகர்க்காய்

607. ............................................. உறக்கமின்றி உழைத்தவர். உயர்வடைந்தார்

1. ஊன் 2. ஊண் 3. துயில் 4. உறவு

608. பாதை விதிமுறைகளுக்குப் புறம்பாகத் தீ அணைப்பு வாகனங்களுக்கு ................................ அளிக்கப்பட்டுள்ளது
   1. உறுதி மொழி    2. விதி விலக்கு
   3. உத்தரவு    4. தகுதி

609. "யான் உண்பல்" என்பதில், "உண்பல்" என்பது உணர்த்தும் காலம்,
   1. இறந்தகாலம்    2. நிகழ்காலம்
   3. எதிர்காலம்    4. முக்காலமும்

610. பின்வருவனவற்றுள்ளே பகுதி இரட்டித்துக் காலங்காட்டும் வினைமுற்று
   1. விடுத்தான்    2. விட்டான்    3. செய்வித்தான்
   4. உண்டும்

611. "வந்த வரவு என்னும் தொடரிலே பெயரெச்சம் ஏற்ற சொல்
   1. செயற்படுபொருள் ஏற்ற சொல்    2. தொழிற்பெயர்
   3. வினைமுதற் பெயர்    4. காலப்பெயர்

612. பின்வருவனவற்றுள்ளே நிகழ்காலங் காட்டும் "செய" என்னும் எச்சம் ஏற்ற தொடர்,
   1. மணியடிக்க விரிவுரையாளர் வகுப்புக்குள் வந்தார்
   2. காற்றடிக்க மரக்கிளை முறிந்தது
   3. மருந்து உண்ண பிணி நீங்கிற்று
   4. குளம் நிறைய மழை பெய்தது

613. பின்வருவனவற்றுள்ளே இருதிணை மூவிடப் பொதுவினை
   1. கெட்டான்    2. செய்யாது    3. இல்லை    4. கரையாய்

614. பின்வருவனவற்றுள் வினையெச்சம்:-
   1. உண்டென இளைத்தான்    2. உண்டனர் களித்தார்
   3. உண்டு மகிழ்ந்து    4. உண்ணின் இறப்பான்

615. பின்வருவனவற்றுள் செயப்படுபொருள் குன்றிய வினைக்கும் செயப்படுபொருள் குன்றாத வினைக்கும் பொதுவானது,
   1. வெளு    2. நட    3. நடந்து    4. பார்

616. வினைச் சொல்லுக்குச் சிறப்பிலக்கணம்
   1. வேற்றுமையேற்பது    2. காலங் காட்டுவது
   3. பகுபதமாயமைவது    4. உரிச்சொல்லடியாகப் பிறப்பது

617. பின்வருஞ் சொற்களில் வாக்கியமாக அமைவது
1. பறவை 2. சும்மா 3. போ 4. நனி

618. பின்வருவனவற்றுள் வடமொழித் பொது அடியாகப் பிறந்த வினைச்சொல்
1. யாசித்தான் 2. அருளினான் 3. அஞ்சினான் 4. ஆண்டான்

619. பின்வருவனவற்றுள் வினைக்குறிப்பு முற்று
1. நடப்ப 2. ஆவான் 3. வைவான் 4. உடையார்

620. பின்வருவனவற்றுள்ளே பகுதி இரட்டித்து இறந்த காலம் காட்டும் சொல்
1. உருட்டினான் 2. சுட்டான்
3. உண்பித்தான் 4. கேட்டான்

621. பின்வருவனவற்றுள் நிகழ்வு, எதிர்வு ஆகிய இரு காலத்துக்கும் பொதுவானது
1. உண்கும் 2. உண்ணும் 3. உண்டும் 4. உண்

622. பின்வரும் வினைச் சொற்களுள் 'விகுதியாற் காலங் காட்டுவது'
1. சென்றேன் 2. ஏசுவார் 3. வாழ்க 4. குழையன்

623. மென்றொடர்க் குற்றியலுகரம் வன்றொடர்க் குற்றியலுகரமாகிப் பிறவினையானது
1. பெருக்கு 2. பயிற்று 3. அடக்கு 4. பாய்ச்சு

624. நாணம் என்பது,
1. பொருட் பெயர் 2. தொழிற் பெயர்
3. குணப் பெயர் 4. சினைப் பெயர்

625. பின்வருவனவற்றுள்ளே காலங் காட்டாத தொழிற் பெயர்
1. நடை 2. உண்ணல் 3. ஆண்மை 4. சொன்னது

626. "பாண்டவர்க்குத் தூது நடந்தானை ஏத்தாத நாவென்ன நாவே" இங்கே "நடந்தான்" என்பது
1. இறந்தகால வினைமுற்று 2. காலங் காட்டுந் தொழிற்பெயர்
3. குறிப்பு வினை 4. வினையாலணையும் பெயர்

627. பின்வருவனவற்றுள் காரணவிடுகுறிப் பெயர்
1. விலங்கு 2. உயிரி 3. அணி 4. வானொலி

628. "எல்லாம்" என்பது,
1. இருதிணை மூவிடப் பொதுப் பெயர்
2. இருதிணை படர்க்கைப் பொதுப் பெயர்
3. அஃறிணை இருபாற் பொதுப் பெயர்
4. உயர்திணை இருபாற் பொதுப் பெயர்

629. பின்வருவனவற்றுள் ஆண்பாலுக்கும் பெண்பாலுக்கும் பொதுவான பெயர்
1. செவிலி 2. அறிவிலி 3. தொடலி 4. வில்லி

630. "நுண்மைநுகரேல்" என்பதில் வரும் நுண்மை,
1. பொருளாகுபெயர் 2. உவமையாகுபெயர்
3. குணவாகுபெயர் 4. இயற்பெயர்

631. "மலையிற் சிறியது குன்று" என்பதில் மலை என்பது ஏற்றுள்ள வேற்றுமை,
1. 5ம் வேற்றுமை 2. 7ம் வேற்றுமை
3. 3ம் வேற்றுமை 4. 4ம் வேற்றுமை

632. பின்வருவனவற்றுள் உருபு மயக்கம்,
1. கிழங்கு மணற்கீன்றமுளை
2. மனத்துக்கண் மாசிலனாதல்
3. தூணிற் சார்ந்தான்
4. விலங்குகளினது குழாம்

633. பின்வருவனவற்றுள்ளே வாக்கியத்திலே தொழிற்படுமியல்பு பற்றித் தமிழ்ச் சொற்களின் வகையைக் காட்டும் தொகுதி
1. பொருட்பெயர், குணப்பெயர், தொழிற்பெயர், வினையாலணையும் பெயர்
2. இயற்சொல், திரிசொல், வடசொல், திசைச்சொல்
3. பெயர்ச்சொல், வினைச்சொல், இடைச்சொல், உரிச்சொல்
4. வினைமுற்று, வினையெச்சம், பெயரெச்சம், வினையாலணையும் பெயர்

634. உரிச்சொல்லென்பது சொல்லாக்கத்திலே

1. பகுதியாய் நிற்கும்  2. விகுதியாய் நிற்கும்
3. இடைநிலையாய் நிற்கும்  4. சாரியையாய் நிற்கும்

635. பின்வருந் தொடர்மொழிகளுள் பெயர், வினை, இடை, உரி என்னும் நால்வகைச் சொற்களும் இடம்பெற்றுள்ள தொடர்மொழி

1. தழைவிரி கடுக்கை மாலை
2. அறம் பொருளின்பம் வீடு
3. கண்டுகேட்டுண்டுயிர்த்துற்றறியும்
4. கடிமலர் மீது வைகு மன்னம்

636. பின்வருவனவற்றுள்ளே இலக்கணப் போலி

1. நகர்ப்புறம்  2. வெந்நீர்
3. கோவில்  4. பொதியில் (அம்பலம்)

637. பின்வருவனவற்றுள் மரூஉ வழக்கு

1. வாழுநாள்  2. வாழ்நாள்  3. வாணாள்  4. வாழுகின்ற நாள்

638. செத்தார் என்பதைத் துஞ்சினார் என்று சொல்வது,

1. இடககரடக்கல்  2. மங்கலம்
3. குழூஉக்குறி  4. இலக்கணப் போலி

639. திரிசொல் எனப்படுவது

1. சிதைவுற்ற தமிழ்ச்சொல்  2. சிதைவுற்ற ஆரியச்சொல்
3. செய்யுள் வழக்குச் சொல்  4. கொச்சைச் சொல்

640. பின்வருவனவற்றுள்ளே தற்சம வடசொல்

1. காரணம்  2. அமைச்சர்  3. சூது  4. புட்பம்

641. "நாடொறும்" என்பதைப் பிரித்தால்

1. நாள் + தொறும்  2. நாள் + தோறும்
3. நாள் + ஒறும்  4. நாள் + டொறும்

642. புதையல் என்பதைப் பிரித்தால்,

1. புதை + அல்  2. புதை + ய் + அல்
3. பு + தையல்  4. புதை + யல்

643. "விருத்தாப்பியம்" என்பது,

1. பண்புமை 2. மடைமை 3. முதுமை 4. பெருமை

644. "அந்நரர் அழிவதற்கு ஐயம் இல்லை" என்பதில் "நரர்" என்பது,

1. நரகர் 2. மனிதர் 3. வஞ்சகர் 4. கொடியவர்

645. "அட்டாலும் பால் சுவையிற் குன்றாது" என்பதில் "அட்டாலும்" என்பது,

1. காய்ச்சுதல் 2. அள்ளுதல் 3. எட்டு 4. அட்டை

646. "சினம் எனும் சேர்ந்தாரைக் கொல்லி" என்பதில் "சேர்ந்தாரைக் கொல்லி" எது?

1. நெருப்பு
2. சினம்
3. சேர்ந்தவர்கள்
4. அனைவரும்

647. பின்வருவனவற்றில் பிறவினை வாக்கியம்

1. பசியால் வாடினான்
2. உள்ளம் பதறுகின்றது
3. மகனை எழுப்பினாள்
4. பாடினாள்

648. "கதிரைக்கு மரம் வெட்டினாள்" என்பதில் உள்ள வேற்றுமை

1. 2ம் வேற்றுமை
2. 3ம் வேற்றுமை
3. 4ம் வேற்றுமை
4. 5ம் வேற்றுமை

649. "ஐ" ன் இன எழுத்து

1. அ 2. ஆ 3. இ 4. ஈ

650. நெடில் தொடர்க் குற்றியலுகரம்,

1. பசு 2. பசீ 3. பாடு 4. பட்டு

651. வங்கம் பொலிகின்ற கடல் என்பதில் "பொலிகின்ற கடல்"

1. பெயர்ச் சொல் தொடர்
2. வினைச் சொல் தொடர்
3. பெயரெச்சத் தொடர்
4. வினையெச்சத் தொடர்

652. "பஞ்சாங்கம்" என்பதைப் பிரித்தால்

1. பஞ்சம் + அங்கம்
2. பஞ்சு + அங்கம்
3. பஞ்சா + அங்கம்
4. பஞ்சு + அங்கு + அம்

653. பின்வருவனவற்றில் வேற்றுநிலை மெய்மயக்கம்
1. பக்கம் 2. அப்பம் 3. பங்கம் 4. சுற்றம்

654. "பால் குடித்தாள்" என்பதில் உள்ள மயக்கம்
1. தொகை 2. வேற்றுமை 3. புணர்ச்சி 4. விகுதி

655. பின்வருவனவற்றில் சிலேடைப் பெயர்
1. புடைவை 2. வேங்கை 3. கரி 4. உரி

656. பகுபத உறுப்பின் 'பகுதி' எப்போதும் குறிக்காதது
1. செயல் 2. ஏவல் 3. காலம் 4. தொழில்

657. புலவர்கள் புரவலர்களால் பாராட்டப்பட்டனர். புரவலர் என்பது
1. புலவர் 2. வள்ளல்கள்
3. மன்னர்கள் 4. மக்கள்

658. வாழ்நாள் எல்லாம் அவப் பொழுதாகிவிட்டது. 'அவப்பொழுது' என்பதன் எதிர்க்கருத்து
1. வீண்பொழுது 2. பெரும்பொழுது
3. தவப்பொழுது 4. பிற்பொழுது

659. மொழிக்கு முதலில் வரும் எழுத்துக்களின் எண்ணிக்கை
1. 12 2. 18 3. 216 4. 21

660. வேற்றுமை உருபை ஏற்காதது
1. கவிஞன் 2. கவிஞனை 3. மற்று 4. மாணவன்

661. பாராளுமன்றில் 19வது திருத்த ............................. கொண்டு வரப்பட்டது
1. சட்டம் 2. பிரேரணை 3. மனு 4. உத்தரவு

662. "துன்புற்றவள் தன்னிலையை எண்ணி மனம் மிக நொந்து வருந்தினாள்" என்பதில் வினையாலணையும் சொல்
1. வருந்தினாள் 2. பசு நொந்து
3. துன்புற்றவள் 4. தன்வினை

663. "வாழ்ந்தாள்" என்பதன் பகுதி
1. வாழ்ந்து 2. வாழ் 3. வா 4. வாழ்ந்த

664. "கவிஞன்" என்பதைப் பிரித்தால்
1. கவி + ஞ் + அன் 2. கவி + ய் + அன்
3. கவி + ஞ் + ஞ் + அன் 4. கவி + அன்

665. கவ்வியது என்பதில் உள்ள இடைநிலை
1. வி 2. ய் 3. ய 4. வ்

666. "முற்றத்துமா" என்பதன் சாரியை
1. இய 2. அத்து 3. றத்து 4. த்து

667. சாரணர் ஒன்று சேர்ந்த விழா
1. ஒலிம்பிக் 2. ஜம்போதி 3. ஜம்பொறி 4. சாரணியர் விழா

668. அப்பெண் வெள்ளை உடுத்தி வந்தாள் இது,
1. குணவாகு பெயர் 2. தொழிலாகு பெயர்
3. காரணப் பெயர் 4. பொருட் பெயர்

669. "விகாரம்" கொண்ட சொல் எது?
1. வந்தனன் 2. படித்தான் 3. சிரித்தான் 4. ஓடினான்

670. உயிர் மெய் வல்லெழுத்துக்கள்
1. 90 2. 72 3. 126 4. 30

671. உயிர் மெய் குற்றெழுத்துக்கள்
1. 90 2. 72 3. 216 4. 24

672. உயிருடனோ மெய்யுடனோ சேராத எழுத்து
1. உயிர் மெய் 2. ஆய்தம்
3. வினா எழுத்து 4. இன எழுத்து

973. பின்வரும் வடமொழிச் சொல் அல்லாதது
1. கல்யாணம் 2. சேமம் 3. அன்னாசி 4. சாட்சி

674. சாரணர் ஒன்று சேர்ந்த விழா:-
1. ஒலிம்பிக் 2. ஜம்போதி 3. ஜம்பொறி 4. சாரணியர் விழா

675. அப்பெண் வெள்ளை உடுத்தி வந்தாள் "வெள்ளை" என்பது
1. குணவாகு பெயர் 2. தொழிலாகு பெயர்
3. காரணப் பெயர் 4. பொருட் பெயர்

676. "கண்வளர்தல்" என்ற மரபுத்தொடர் குறிப்பது

1. இறத்தல் 2. கண்குருடாதல்
3. கண்கள் பெரிதாகல் 4. நித்திரை செய்தல்

677. "வருத்தம் பாராமல் பிறருக்கு உதவுதலைக்" குறிக்கும் மரபுத்தொடர்

1. கை கொடுத்தல் 2. கழுத்துக் கொடுத்தல்
3. கை தூக்கிவிடல் 4. கழுத்து நீட்டல்

678. "கடுமையாகக் கண்டித்தல்" என்னும் பொருள் தரும் மரபுத் தொடர்

1. நெருப்பெடுத்தல் 2. புறந்தருதல்
3. வயிறெரிதல் 4. மட்டந் தட்டுதல்

679. "ஈட்டி எட்டின மட்டும் பாயும். பணம் பாதாளம் மட்டும் பாயும்" என்ற பழமொழி குறிப்பது

1. இளமையின் சிறப்பை 2. ஏழ்மையில் வலிமையை
3. பண வலிமையை 4. மன வலிமையை

680. "அறிவின் அடக்கம்" என்ற பொருள் குறிக்கும் பழமொழியானது

1. நிறைகுடம் தளும்பாது
2. புத்திமான் பலவான்
3. வெள்ளைக்கில்லை கள்ளச்சிந்தை
4. மூத்தோர் சொல் வார்த்தை அமிர்தம்

681. "சிட்டாய்ப் பறத்தல்" என்னும் மரபுத் தொடரின் பொருள்

1. கற்பனை செய்தல் 2. விரைந்தோடிப் போகுதல்
3. அலைக்கழித்தல் 4. திருடி ஓடுதல்

682. "வேதனை மிகுதல்" என்னும் பொருளைக் குறிக்கும் மரபுத் தொடர்

1. உருக்குலைதல் 2. உலை வைத்தல்
3. குட்டிச் சுவராதல் 4. ஈரல் கருகுதல்

683. முற்காலத்திலே படை வரிசையிலே முதலணியிற் சென்ற படைக்கு வழங்கிய பெயர்

1. முன்னணி 2. முன்வரிசை
3. தூசிப்படை 4. முற்படை

684.பிறருக்கு தீங்கவிளைக்கவல்ல சொற்களைச் சேர்த்துக் கவிபாடுதல்:

1. அறம் பாடுதல் 2. சுரம் பாடுதல்
3. திறம் பாடுதல் 4. அங்கதம் பாடுதல்

685. "பிறருக்கு பயப்படாது உண்மை கூறுபவன் பெரும்பாலும் பிறரது எதிர்ப்பைச் சம்பாதிப்பான்" என்பதைக் குறிக்கும் பழமொழி

1. அச்சம் இல்லாதவன் அம்பலம் ஏறுவான்
2. கற்றம் பார்க்கிற் சுற்றமில்லை
3. எய்தவன் இருக்க அம்பை நோவான் ஏன்?
4. யதார்த்தவாதி வெகுசன விரோதி

686. "கீழோருடன் நட்பு கொள்வதால் கேடுவிளையும்" என்பதை விளக்கும் பழமொழி

1. பன்றியோடு கூடிய பசுவும் பவ்வீ அருந்தும்
2. கேடுவரும் பின்னே மதிகெட்டு வரும் முன்னே
3. அற்பர் சினேகம் பிராண சங்கடம்
4. கெடுகுடி சொற் கேளாது

687. " வறுமையால் வருந்திய குசேலரின் குடும்பத்துக்கு கண்ணபிரான் பல பொருள் உதவிகளைச் செய்து காத்தார்." இவ்வாக்கியம் குறிக்கும் மரபுத் தொடர்

1. கைந்நிறுத்துதல் 2. கைநீண்டுதல்
3. கைதாங்குதல் 4. கைதூக்கிவிடுதல்.

688. "வயறு கடித்தல்" என்ற மரபுத் தொடருக்கு ஒப்பான மற்றொரு மரபுத் தொடர்

1. வயிறு குளிர்தல் 2. வயிற்றைக் கலக்குதல்
3. வயிறு வளர்த்தல் 4. வயிறு கிள்ளுதல்

689.கட்டுக்கடங்காமல் இயங்கும் இளைஞன்..........................என்று அழைக்கப்படுபவன்

1. துட்டன் 2. சிறுபட்டி 3. கட்டாக்காலி 4. தீயவன்

690. உலகமும் உலகவின்பங்களும் மட்டும் மெய்யென்றும் கடவுளோ மறுமைபோ இல்லையென்றும் வாதிப்பவனை ........................................... என்று அழைப்பர்

1. விகடகவி 2. அமலன் 3. ஆத்திகன் 4. உலோகாயுதன்

691. தகுதிக்குமேல் எண்ணக் கூடாது என்பதை உணர்த்தும் பழமொழி
1. உயரப் பறந்தாலும் ஊர்க்குருவி பருந்தாகுமா?
2. ஐயர் வருமட்டும் அமாவாசை காத்திருக்குமா?
3. உடையவன் பாரா வேலை ஒருமுழம் கட்டை
4. எடுப்பது பிச்சை ஏறுவது பல்லக்கு

692. ஆசிரியர் கூறிய கருத்துகளுக்கு மாணவர் செவிகொடுத்தனர். இங்கு "செவி கொடுத்தல்" என்பது
1. தொடர் மொழி
2. உவமைத்தொடர்
3. பேச்சுமொழி
4. மரபுப் பெயர்

693. அதிபர் கூறிய விடயத்தைக் கேட்ட மாணவர்களுக்கு உச்சி குளிர்ந்தது. இங்கு "உச்சி குளிர்தல்" எனும் இலக்கணத் தொடர் உணர்த்தும் பொருள்
1. வெறுப்பு வருதல்
2. மிக மகிழ்தல்
3. கோபம் வருதல்
4. பயம் வருதல்

694. "சர்வாதிகார அரசை வீழ்த்தும் பணிக்குத் தோள் கொடுங்கள்" இங்கு "தோள் கொடுங்கள்" என்னும் மரபுத் தொடருக்குப் பொருத்தமான மற்றொரு மரபுத் தொடர்
1. முகம் பார்த்தல்
2. கை கொடுத்தல்
3. வால் பிடித்தல்
4. வாய் கொடுத்தல்

695. "காவலரை கண்டதும் பூங்காவில் படுத்திருந்தவன் வாரிச் சுருட்டிக் கொண்டு எழுந்தான்". இங்கு "வாரிச் சருட்டிக் கொண்டு" என்றால்
1. செய்வது அறியாமல்
2. பணத்தை எடுத்துக் கொண்டு
3. மிகுந்த பதற்றத்துடன்
4. அச்சமில்லாமல்

696. "குற்றத்துக்குத் தண்டனை அனுபவித்தவனை மீண்டும் அக்குற்றத்தைச் செய்ய முனைய மாட்டான்" என்பதை விளக்கும் பழமொழி
1. கழுதைப் புண்ணுக்கு புழுதி மருந்து
2. குற்றமுள்ள நெஞ்சு குறுகுறுக்கும்
3. காற்றுள்ளபோதே தூற்றிக் கொள்
4. சூடு கண்ட பூனை அடுப்பங்கரையை நாடாது

697. "காரியம் கைகூடும் நேரத்தில் தவறிப்போதலைக் குறிக்கும்" பழமொழி

1. வெண்ணைதிரளும் போது தாழி உடைதல்
2. மந்திரம் கால் மதி முக்கால்
3. சிறுகக் கட்டி பெருக வாழ்
4. புத்திமான் பலவான்

698. "துறைபோதல்" என்னும் மரபுத்தொடரின் பொருள்

1. அவமானப்படல்
2. அவமதித்தல்
3. நாடுவிட்டு நாடு செல்லுதல்
4. நிரம்பக்கற்றல்

699. இராவணன் செய்வது நீதியற்றது எனக் கும்பகர்ணன் இடித்துரைத்தான். "இடித்துரைத்தல்" என்பது

1. போருக்கழைத்தல்
2. ஆதரவு கொடுத்தல்
3. ஆதரவின்றி நிற்றல்
4. வற்புறுத்தி எடுத்துக்கூறுதல்

700. "ஆங்கிலேயரின் ஆட்சியானது ஒரு சில காலம் இலங்கையில் காலூன்றி நின்றமையால் பல நன்மைகளும் ஏற்பட்டன" என்பதை மறுக்க முடியாது. "காலூன்றுதல்" என்பதன் பொருள்

1. உதவி செய்தல்
2. நிலை பெறுதல்
3. கவனித்தல்
4. தடைப்படல்

701. "தகுதி கண்டே உதவு" என்ற கருத்தைத் தரும் பழமொழி

1. பாத்திரமறிந்து பிச்சை கொடு
2. வேலிக்கு வைத்த முள் காலிலே தைத்தது
3. நல்ல மரத்திற்கு ஒரு புல்லுருவி
4. புத்திமான் பலவான்

702. "வதந்திக்கு வாய்ப்பூட்டு போடமுடியாது". இதனை விளக்கும் பழமொழி

1. திக்கற்றவனுக்கு தெய்வமே துணை
2. யதார்த்தவாதி வெகுசன விரோதி
3. குறைகுடம் தளும்பும் நிறைகுடம் தளம்பாது
4. ஊர் வாயை மூட உலை மூடி இல்லை

703. "ஒவ்வொருவரும் செய்த நன்மை தீமைகளை தாமே அனுபவிக்க வேண்டும்" என்ற கருத்தைத் தரும் பழமொழி
1. நாம் ஒன்று நினைக்கத் தெய்வம் ஒன்று நினைக்கும்
2. முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்
3. ஆனைக்கொரு காலம் பூனைக்கொரு காலம்
4. கேடுவரும் பின்னே மதிகெட்டு வரும் முன்னே

704. தவறான எண்ணத்துடன் எதையும் நோக்குபவனுக்கு எதுவும் தவறாகவே தெரியும் என்ற கருத்தைத் தரும் பழமொழி
1. கழுதை அறியுமா கற்பூர வாசனையை
2. பொரிமாவை கைப்புண் மெச்சினான் பொக்கைவாயன்
3. குற்றமுள்ள நெஞ்சு குறுகுறக்கும்
4. காமாலைக் கண்ணுக்குக் கண்டதெல்லாம் மஞ்சள்

705. நாம் எடுப்பார் கைப்பிள்ளையாக வாழாது நிதானம் பெற வேண்டும். இங்கு "எடுப்பார் கைப்பிள்ளை" என்பது
1. நாவழற்றுதல்　2. எவர்க்கும் வசப்படுதல்
3. விடாப்பிடி　4. தொண்டு செய்தல்

706. "கைப்புண்ணுக்கு கண்ணாடி வேண்டுமா? இப்பழமொழி உணர்த்தும் பொருள்
1. வினா　2. தெளிவு　3. கஷ்டம்　4. துன்பம்

707. "எதனையும் முறையின்றி, ஒழுங்கின்றிச் செய்தல்" என்னும் பொருளைப் புலப்படுத்தும் மரபுத்தொடர்
1. குத்துக்கரணம்　2. தப்புத்தாளம்
3. பொய்ப்புரட்டு　4. கோணல் மாணல்

708. "காகம் திட்டி மாடு சாகாது" என்பதன் பொருள்
1. கிடைக்க முடியாததை விடல்　2. வீண் பழிக்கு அஞ்சேல்
3. தப்பபிப்பிராயம்　4. ஆராய்ந்து செய்

709. "வீண்பெருமை" என்ற பொருள் உணர்த்தும் பழமொழி
1. இட்டு கெட்டார் எங்குமில்லை
2. இக்கரை மாட்டுக்கு அக்கரை பச்சை
3. எடுப்பது பிச்சை ஏறுவது பல்லக்கு
4. ஆழமறியாது காலை விடாதே

710. "காது குத்துதல்" என்ற மரத் தொடரின் பொருள்
1. அவதானித்தல் 2. ஏமாற்றுதல்
3. கோள் சொல்லுதல் 4. இரகசியம் கூறல்

711. "கேடு விளைவித்தல்" குறிக்கும் மரபுத்தொடர்
1. வாய் விடுதல் 2. வாய்ப்பூட்டு போடுதல்
3. வாயில் மண் போடுதல் 4. வாய் புலம்பல்

712. "ஒற்றைக் காலில் நிற்றல்" என்பதன் இலக்கணத்தொடர்
1. ஒரு காலில் நிற்றல் 2. இரண்டு கால்களிலும் நிற்றல்
3. விடாப்பிடியாக நிற்றல 4. விடாது முயலுதல்

713. "பிறர் கூறுவதைக் கவனித்துக் கேட்டல்" என்னும் பொருள் தரும் தொடர்
1. காதைக் கடித்தல் 2. காது குத்துதல்
3. காது கொடுத்தல் 4. காதிலடி மடல்

714. "ஒரு காரியத்தை நன்கு பயிற்சி செய்த பின்னே தான் பகிரங்கமாகச் செய்து காட்ட வேண்டும்" என்ற பொருளைத் தரும் பழமொழி
1. ஆரியக் கூத்தாடினாலும் காரியத்தில் கண்ணாயிரு
2. அறையிலாடியன்றோ அம்பலத்திலாட வேண்டும்
3. ஆடத் தெரியாதவள் கூடம் கோணல் என்றாளாம்
4. பதறாத காரியம் சிதறாது

715. "சுறுசுறுப்புடன் செயல்படின் வெற்றி நிச்சயம்" என்னும் பொருள் வரும் பழமொழி
1. அற நனைந்தவனுக்குக் கூதலென்ன குளிரென்ன
2. பழகப் பழகப் பாலும் புளிக்கும்
3. எறும்பூரக் கற்குழியும்
4. இருந்தக்கால் மூதேவி இருந்தக்கால் சீதேவி

716. "நட்டாற்றிற்கை விடுபவனை நம்பி நாம் ஏமாறக்கூடாது" இங்கு "நட்டாற்றில் கைவிடுதல்" என்ற மரபுத்தொடரின் உட்பொருள்
1. செய்வதறியாது துன்பப்படல் 2. ஆபத்திற் கைவிடுதல்
3. கெட்டழிந்து போதல் 4. அழிவு வருவித்தல்

717. "தண்டனையில் இருந்து தப்புவதற்காக நீ முதலைக் கண்ணீர் வடிக்கிறாய் என்பது எனக்குத் தெரியும்" "முதலைக் கண்ணீர்" என்ற மரபுத்தொடரின் உட்பொருள்
1. முதலையினது கண்ணீர்
2. தவறு செய்தவனது கண்ணீர்
3. பாசாங்கு செய்தல்
4. ஏமாற்றுதல்

718. "பட்டி தொட்டி" என்னும் இணைமொழியின் பொருள் தரும் வேறோர் இணைமொழி
1. நாடுநகர்
2. தோட்டந்துரவு
3. சந்துபொந்து
4. மூலைமுடுக்கு

719. ஆசைகள் இருப்பினும் சிலவேளைகளில் அவற்றை இகத்திலிருந்து அகற்றியே ஆகவேண்டும் என்னும் பொருளைத் தரும் பழமொழி
1. செல்வம் என்பது சிந்தையின் நிறைவே
2. கிட்டாதாயின் வெட்டென மற
3. கூழுக்கும் ஆசை மீசைக்கும் ஆசை
4. போதுமென்ற மனமே பொன் செய்யும் மருந்து

720. "சுகதுக்கம் சுழல் சக்கரம்". என்ற பழமொழியின் கருத்து
1. சுகமும் துக்கமும் சுழலுகின்ற சக்கரம் போன்றவை
2. இன்பதுன்பம் வாழ்வில் மாறிமாறி வரும்
3. இன்பதுன்பத்தை நாம் அனுபவிக்க வேண்டும்
4. இன்பதுன்பமின்றி வாழ்பவர் உலகில் எவருமில்லை

721. "அறிவு, ஆற்றல், ஒழுக்கம் ஆகியவற்றில் சிறந்தவர்கள் அடக்கமாக இருப்பர்" என்பதை விளக்கும் பழமொழி
1. நிறைகுடம் தளம்பாது
2. இளங்கன்று பயமறியாது
3. கடுகு சிறிது காரம் பெரிது
4. பதறாத காரியம் சிதறாது

722. "மல்லுக்கட்டுதல்" என்ற மரபுத்தொடர் வரும் கருத்து
1. வேட்டி கட்டுதல்
2. மோதிக் கொள்ளுதல்
3. சீவனத்தைக் கெடுத்தல்
4. வீண்பாடுபடுதல்

723. கண்மூடித்தனமாகச் சில கொள்கைகளைப் பின்பற்றுவது கண்டிக்கப்பட வேண்டிய ஒன்றாகும். இங்கு "கண்மூடித்தனம்" என்ற மரபுத்தொடர் தரும் கருத்து
1. முரண்பாடு
2. அறியாமை
3. கேடுவிளைவித்தல்
4. உறுதியின்மை

724. "தொன்றுதொட்டு வழங்கிவரும் முறைமை" என்ற கருத்தைத் தரும் சொல்

1. மரபு  2. புராதனம்  3. மந்திரம்  4. போலி

725. "தன்நலத்துக்காகப் பிறர் சொத்தை அல்லது உழைப்பைப் பயன்படுத்துதல்"

1. தனியுரிமை  2. ஏகாதிபத்தியம்
3. சுரண்டல்  4. சர்வாதிகாரம்

726. "இக்கட்டான சூழ்நிலையைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தி நன்மைபெற முயல்பவன்" என்ற கருத்தைத் தரும் பழமொழி

1. புத்திமான் பலவான்
2. வல்லவனுக்க வல்லவன் வையகத்தில் உன்டு
3. ஊர் குழம்பினால் உடையாருக்கு வேட்டை
4. எதார்த்தவாதி வெகுஜன விரோதி

727. "ஆற்றிலே போட்டாலும் அளந்து போடு" எனும் பழமொழியின் மிகப் பொருத்தமான கருத்து

1. ஆற்றிற்கு அணைகட்டும் போது அளந்து கட்டுதல் வேண்டும்
2. இரப்போரின் தரம் பார்த்து ஈதல் வேண்டும்
3. எத்தகைய செலவு செய்வதாயினும் அவதானமாகச் செய்ய வேண்டும்
4. எத்தகைய செயலைச் செய்யினும் அதற்கொரு குறிக்கோள் இருத்தல் வேண்டும்

728. "பிறரை ஏமாற்றி வாழும் ஒருவன் இறுதியில் கொடிய துன்பத்திற்கு ஆளாவான்" என்ற கருத்தைத் தரும் பழமொழி

1. எதார்த்தவாதி வெகுசன விரோதி
2. பேச்சுப் பல்லக்கு தம்பி கால்நடை
3. ஊரோச்சம் வீடு பட்டினி
4. உருட்டும் புரட்டும் சிரட்டையும் கையும்

729. "விழலுக்கு நீர் பாய்ச்சி மாயமாட்டோம்" - விழலுக்கு நீர் பாய்ச்சுதல் **அல்லது** "விழலுக்கிறைத்தல்" என்ற மரபுத்தொடர் தரும் கருத்து

1. வீண்பாடுபடுதல்  2. பருவத்தே பயிர் செய்யாமை
3. பெருமுயற்சி செய்தல்  4. விருப்பின்றிச் செய்தல்

730. "பயன்படாத கல்வியறிவு" என்ற பொருளைத் தரும் மரபுத்தொடர்

1. அரைப்படிப்பு
2. நுனிப்புல் மேய்தல்
3. ஏட்டுச் சுரைக்காய்
4. எழுத்தெண்ணிப் படித்தல்

731. "பிறருக்கு வாரிவழங்குவதால் ஒருவருக்கு ஏற்படும் மகிழ்ச்சியைக்" குறிக்கும் அருஞ்சொற்றொடர்

1. இகபர இன்பம்
2. ஈத்துவக்குமின்பம்
3. இறுதியிலின்பம்
4. பேரின்பம்

732. அரசாங்கத்தில் தொழில் பெறுவதற்கு இளைஞர்கள் பலர் **கசகரணம்** போடுகிறார்கள். "கசகரணம்" போடுதல் என்றால்

1. பெருமுயற்சி செய்தல்
2. பந்தம் பிடித்தல்
3. தோப்புக்கரணம் போடுதல்
4. பிடிவாதமாய் இருத்தல்

733. "நகைப்பை விளைவிக்கும் செயல்" என்னும் பொருளைத் தரும் மரபுத் தொடர்

1. கொட்டமடித்தல்
2. தலைகீழாய் நிற்றல்
3. கோமாளிக் கூத்து
4. கச்சை கட்டுதல்

734. "வயிற்றுப் பிழைப்புக்காக நீ கரடி விடுகிறாய் என்பது எனக்கு தெரியும்". "கரடி விடுதல்" என்ற மரபுத்தொடரின் உட்பொருள்

1. விடாப்பிடியாய் இருத்தல்
2. பயமுறுத்திக் காரியத்தைச் சாதித்தல்
3. பொய்யைக் கூட்டிக் கூறுதல்
4. கரடியைக் கொண்டு விளையாட்டுக் காட்டுதல்

735. வசதிகள் இருப்பினும் சிலவேளைகளில் அவற்றை நன்கு அனுபவிக்க முடிவதில்லை என்னும் பொருளைத் தரும் பழமொழி

1. கூழுக்கும் ஆசை மீசைக்கும் ஆசை
2. கைக்கெட்டியது வாய்க்கெட்டவில்லை
3. உண்ணாச்சொத்து மண்ணாய்ப் போகும்
4. சுகமும் துக்கமும் சுழலும் சக்கரம்

736. "ஆறிய கஞ்சி பழங்கஞ்சி" என்ற பழமொழியின் கருத்து

1. கஞ்சி ஆறிவிட்டால் குடிக்க முடியாமல் இருக்கும்
2. எக்காரியத்தையும் நிதானமாகச் செய்தல் நன்று
3. இளமையில் பழகாத காரியம் முதுமையில் வராது
4. எக்காரியத்தையும் பிற்போடாது உடன் செய்தல் நல்லது

737. "ஒரு சிலரின் பிற்காலச் சிறப்பினை இளம் வயதுச் செயல்களிலிருந்தே அறியலாம் என்பதை விளக்கும்" பழமொழி

1. ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா?
2. தொட்டிற் பழக்கம் சுடுகாடு மட்டும்
3. விளையும் பயிரை முளையிலே தெரியும்
4. இலையும் பழுப்பும் எங்கும் உண்டு

738. விலைவாசிகள் அதிகரித்த நிலையில் மக்கள் வயிற்றைக்கட்டி வாழிகின்றனர். "வயிற்றைக்கட்டுதல்" என்ற மரபுத் தொடருக்குப் பொருத்தமான மற்றொரு மரபுத்தொடர்

1. கச்சை கட்டுதல்
2. வயிற்றிலடித்தல்
3. வாய்புதைத்தல்
4. வாயைக்கட்டுதல்

739. நுனிப்புல் மேய்தலால் ஆழமான அறிவைப் பெறமுடியாது. "நுனிப்புல் மேய்தல்" என்றால்

1. ஒன்றும்விடாது படித்தல்
2. மனப்பாடஞ் செய்தல்
3. மேலெழுந்தவாரியாகப் படித்தல்
4. அக்கறையின்றிக் கற்றல்

740. "பாதுகாப்பாக இருக்குமென்று எண்ணிச் செய்யப்பட்ட ஏற்பாடுகள் சில, துன்பத்தைத் தருவதும்உண்டு" என்பதை விளக்கும் பழமொழி

1. முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்
2. வேலிக்கு வைத்த முள் காலிலே தைத்தது
3. மடியில் கனமிருந்தால் வழியில் பயம்
4. நல்ல மரத்துக்கு ஒரு புல்லுருவி

741. "சாக்குப் போக்குச் சொல்லுதல்" என்னும் பொருள் தரும் மரபுத்தொடர்

1. இடித்துரைத்தல்
2. பசையடித்தல்
3. தட்டிக்கழித்தல்
4. ஆறப்போடுதல்

742. அவன் எக்காரியத்தையும் நிதானமாக செய்ய முடியாத அவசரக்குடுக்கை. "அவசரக்குடுக்கை" என்றால்

1. பயனற்றவன்
2. குறும்புக்காரவன்
3. திறனற்றவன்
4. பதற்றக்காரன்

743. "செய்த தவறை மீண்டும் செய்யாதிருக்க ஒரு முறை ஏற்பட்ட அனுபவம் உதவும்" என்பதை விளக்கும் பழமொழி
1. துள்ளின மாடு பொதி சுமக்கும்
2. சூடு கண்ட பூனை அடுப்பங்கரை நாடாது
3. நுணலும் தன்வாயாற் கெடும்
4. தொட்டிற் பழக்கம் சுடுகாடு மட்டும்

744. "கூழுக்குமாசை மீசைக்குமாசை" என்ற பழமொழியின் கருத்து
1. ஒரு பயனை எய்தவிழையும் அதே வேளை இன்னொன்றை இழக்க விரும்பாமை
2. இரு காரியங்கள் நிறைவேற வேண்டுமாயின் இரண்டிலும் ஆசை இருத்தல் வேண்டும்
3. ஒருவர் உணவு உண்ணும் போது மற்றொருவர் இடைஞ்சலாக இருத்தல்
4. எக்காரியத்தை செய்யும் போதும் விருப்புவெறுப்பற்ற நிலை இருத்தல் வேண்டும்

745. "ஆனைக்கும் அடி சறுக்கும்" என்ற பழமொழியின் கருத்து
1. செல்வரும் வறியவர் ஆவர்
2. ஆண்டியும் அரசன் ஆவான்
3. எல்லா மிருகங்களுக்கும் அடி வழுக்கும்
4. வல்லமை மிக்காரும் தவறுவர்

746. "கேடு விளைந்த பின்னர் அதனைத் தடுக்க முயல்வது பயனற்றது" என்னும் பொருள் தரும் பழமொழி
1. கண் கெட்டதன் பின்னரா சூரிய நமஸ்காரம்
2. அணை கடந்த வெள்ளம் அழுதாலும் வராது
3. ஊர் வாயை மூட உலை மூடி இல்லை
4. வெள்ளம் வருமுன்னே அணைகட்ட வேண்டும்

747. "தவிடு பொடியாதல்" எனற மரபுத்தொடரின் பொருள்
1. விரைந்தோடிப் ரோதல் 2. முழுவதும் நிலை குலைதல்
3. வீணாகிப் போதல் 4. தன்வயப்படுதல்

748. "பணிந்து போதல்" என்ற பொருளைத் தரும் மரபத்தொடர்
1. வாலைக் கீழே போடுதல் 2. வால் கட்டுதல்
3. வால் முறுக்குதல் 4. வாலாட்டுதல்

749. "முகம் பார்த்தல்" என்ற மரபுத் தொடரின் கருத்து
1. முகத்தை கண்ணாடியில் பார்த்தல்
2. ஒருவரை ஒருவர் உற்று நோக்குதல்
3. கோபங் கொள்ளுதல்
4. கருணை காட்டுதல்

750. "மண் குதிரையை நம்பி ஆற்றில் இறங்கலாமா"?
1. முன் யோசனையோடு செய்யும் முயற்சி வீண் போகாது
2. தைரியம் உண்டானால் மண் குதிரையிலும் ஆற்றைக் கடக்கலாம்
3. போலிப் பொருள்களைக் கொண்டு சாதிக்கத் துணிதல்
4. முயற்சி ஒன்றில் ஈடுபட முன் அதனால் வரும் நன்மை தீமைகளை அறிந்திருத்தல்

751. "உதவாக்கரை" என்ற மரபுத் தொடரின் கருத்து
1. ஆற்றங்கரை
2 பயனற்றவன்
3. ஊதாக்கரைசல்
4. உதவி கேட்பவன்

752. "கழுத்துக் கொடுத்தல்" என்ற மரபத் தொடரின் கருத்து
1. துன்புறுகையில் உதவி செய்தல்
2. உதவி செய்தல்
3. பாரத்தைத் தாங்குதல்
4. கொலை செய்தல்

753. "சீவனத்தைக் கெடுத்தல்" என்ற பொருள் தரும் மரபுத்தொடர்
1. வயிற்றிலடித்தல்
2. வயிறு வளர்த்தல்
3. வயிறெரிதல்
4. வயிறு வாய்த்தல்

754. "தன் குடும்பத்தை சீர் பெற நடத்தத் தெரியாதவன் பொதுத்தொண்டில் ஈடுபடுதல்" என்னும் பொருளுக்கு பொருத்தமான உவமைத்தொடர்
1. இக்கரை மாட்டுக்கு அக்கரை பச்சை போல
2. உட்சுவர் இருக்கப் புறச்சுவர் தீற்றுதல் போல
3. மயிலைக் கண்டு வான்கோழி ஆடினாற் போல
4. விளக்குமாற்றுக்கு பட்டுக்குஞ்சம் கட்டியது போல

755. "நடந்து முடிந்ததொன்றைப் பற்றி சிந்திபதிற் பயனில்லை" என்னும் பொருள் தரும் பழமொழி

1. ஆங்காலம் ஆகும். போங்காலம் போகம்
2. ஆற்றிலே போட்டாலம் அளந்து போடு
3. அணைகடந்த வெள்ளம் அழுதாலும் வராது
4. கண்கெட்ட பிறகு சூரிய வணக்கமா?

756. "குந்தியிருந்து தின்றால் குன்றும் மாளும்" என்ற பழமொழியின் கருத்து

1. சொகுசு வாழ்க்கைக் கன்றினைப் போல உயர்ந்தது
2. சோம்பேறியின் வாழ்க்கை எந்நாளும் சிறப்படையாது
3. முயற்சியற்றவனின் பெருஞ் செல்வம் விரைவில் அழியும்
4. முயற்சி திருவினை ஆக்கும்

757. "நாம் நினைத்தபடி கருமங்கள் நடைபெறவதில்லை" என்பதை விளக்கும் பழமொழி

1. அவனின்றி எதுவும் அசையாது
2. திக்கற்றவனுக்கு தெய்வமே துணை
3. நாம் ஒன்று நினைக்க தெய்வம் ஒன்று நினைக்கும்
4. உப்பிட்டவரை உள்ளளவும் நினை

758. "உயர்ந்தவர் தாழ்வதும் தாழ்ந்தவர் உயர்வதும்" எனும் கருத்தமைந்த பழமொழி

1. கோரம் மாறினாலும் குணம் மாறாது
2. துள்ளுகிற மாடு பொதி சுமக்கும்
3. ஆனைக்கொரு காலம் பூனைக்கொரு காலம்
4. இளங்கன்று பயமறியாது

759. "வென்று தன்னாணைக்குள்ளாக்குதல்" என்றால்

1. அடிகோலுதல்
2. அடிப்படுதல்
3. அடிக்கீழ்ப்படுத்துதல்
4. அடிதொடுதல்

760. "அத்திவாரமிடல்" என்பதற்குப் பொருத்தமான மரபுத்தொடரை தெரிக?

1. அடியொற்றுதல்
2. அடிகோலுதல்
3. அடிநகர்தல்
4. அடியிடுதல்

761. "நிழலளந்து பொழுதறிதல்" என்றால்
1. அடிப்பார்த்தல் 2. கண்ணறுத்தல்
3. வழிபார்த்தல் 4. முகஞ்செய்தல்

762. "நெறிதவறி நடத்தல்" என்பதன் மரபுத்தொடர்
1. அடியொற்றுதல் 2. கண்டுகாணுதல்
3. கண்ணாதல் 4. அடிபிழைத்தல்

763. "தன் மரபைப் புகழ் பெறச் செய்தல்" என்பதன் மரபுத்தொடரைத் தெரிக
1. அடியுறை 2. அடிவிளக்குதல்
3. கண்டுபாவித்தல் 4. கைநெகிழ்தல்

764. "பின்வாங்குதல்" என்பதற்றுகுப் பொருத்தமான மரபுத்தொடர்
1. அடிபிறக்கிடுதல் 2. அடியுறைதல்
3. தலைக்கட்டுதல் 4. கைதருதல்

765. "பிறர் பாதந் தொட்டுச் சபதம் பண்ணுதல்" என்றால்
1. அடிதொடுதல் 2. கண்சுருட்டுதல்
3. கைகலத்தல் 4. தோள்கொடுத்தல்

766. "ஒருவருடைய பாதுகாப்பிற்குள்ளாதல்" என்றால்
1. அடிப்பாத்தல் 2. தலைமேற்கொள்ளுதல்
3. அடியிலேயுறைதல் 4. கண்டுபாவித்தல்

767. தான் பிறனைப் பார்ப்பதை அவன் காணாதவாறு தான் அவனைப் பார்த்தல்
1. கண்டுகாணுதல் 2. கண்ணாற் சுடுதல்
3. கண்களவு கொள்ளுதல் 4. முகஞ்செய்தல்

768. "வெறுப்புண்டாகும் வரை அனுபவித்து விலக்குதல்" என்றால்
1. கண்டுகழித்தல் 2. தோளோடு தோள் நிற்றல்
3. நாக்குப் புரளுதல் 4. வழிபார்த்தல்

769. "அறிந்து தீமை செய்தல்" என்றால்
1. கண்ணிற்றல் 2. கண்கெடச் செய்தல்
3. தலைதடவுதல் 4. தோளிலிருந்து செவிகடித்தல்

770. "அறிவு தளர்தல், அன்பு குறைதல்" என்பவற்றுக்குப் பொருத்தமான மரபுத்தொடர்
1. கண்சாய்தல் 2. கைதப்புதல்
3. கால்சாய்தல் 4. கண்வளர்தல்

